விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 192 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 14 வெள்ளிக்கிழமை (28.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## அனைத்து ஆசிரியர்களும்
# இன்று பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டும்
## அமைச்சர் பந்துல



(கொழும்பு)

அனைத்து ஆசிரியர்களையும் இன்று பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அமைச்சர் பந்துல குணவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

15

## அதிபர்கள், ஆசிரியர்களின் போராட்டத்தால்
# கல்வி நடவடிக்கை பாதிப்பு

(கொழும்பு)

அதிபர்கள், ஆசிரியர்களின் போராட்டத்தால் நாடு முழுவதும் கல்வி நடவடிக்கைகள் நேற்று பாதிக்கப்பட்டிருந்தது.

தமது போராட்டத்தின் மீது நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்க கூட்டமைப்பு நேற்றும் நாடளாவிய ரீதியில் சுகவீன விடுமுறைத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டது.

அதிபர் ஆசிரியர்களின் சுகவீன விடுமுறை தொழிற்சங்க போராட்டம் காரணமாக பாடசாலைகளில் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் வரவு மிகக்குறைவாக காணப்பட்டது.

இதனிடையே, நேற்று ஆரம்பிக்கப்படவிருந்த கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையின் 2ஆம் கட்ட மதிப்பீட்டு பணிகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாக இலங்கை பரீட்

15

## ஆசிரியர் சேவை அத்தியாவசியம் என அறிவிக்கப்படும்
# பிள்ளைகளின் கல்வியுடன் விளையாட முடியாது
## ஜனாதிபதி கடும் எச்சரிக்கை



(கொழும்பு)

பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையில் யாரும் விளையாட முடியாது என எச்சரித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனிவரும் நாட்களில் பிள்ளைகள் கல்வியை இழப்பதற்கு சந்தர்ப்பம் உருவானால் ஆசிரியர் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)

## விளான் பகுதியில்
# மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விளான் பகுதியில், சுண்ணாம்புச் சூளைக்கு அருகில்

15

## வவுனியாவில்
# நோயாளர் விடுதியில்
## இளைஞனின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் இருந்து இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக

15



## வடக்கைப் பொருளாதாரத்தில்
# வலுவடைந்த மாகாணமாக மாற்றுவதே ஜனாதிபதியின் இலக்கு
## ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவிப்பு

(வவுனியா)

வடக்கை பொருளாதாரத்தில் வலுவடைந்த மாகாணமாக மாற்றுவது ஜனாதிபதியின் இலக்காக உள்ளதென வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட ஒருங்

15

# உண்மையைக் கூறாத ஆட்சி எமது நாட்டுக்குத் தேவையா?
## மக்களே தீர்மானிக்க வேண்டும் – சஜித்




(கொழும்பு)

வங்குரோத்து நாட்டில் கூட மக்களுக்கு உண்மையைக் கூற முடியாத ஆட்சி எமது நாட்டுக்குத் தேவையா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

02

# நாய்க்கடிக்கு இலக்கான 4 வயது சிறுமி உயிரிழப்பு
## கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கண்டாவளை, குமாரசாமிபுரம் பகுதியில் நாய்க் கடிக்குள்ளாகி சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அதே பகுதி

15

## நாவாந்துறையில்
# மின் ஒழுக்கால் வீடொன்று எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைப் பகுதியில் மின் ஒழுக்கு காரணமாக வீடு ஒன்றின் மேல்தளம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

15

## பருத்தித்துறை வைத்தியசாலையில்
# நோயாளியான யுவதி ஒருவரை வெட்ட முற்பட்டதால் பரபரப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்குள் பிரவேசித்து நோயாளி ஒருவரை கத்தியால் வெட்ட முற்பட்டவரால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று வியாழக்கிழமை நண்பகல் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பருத்தித்துறை ஆதார வைத்திய

15

நடுவு நிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையை...

களுத்துறையில் நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நமது நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு விட்டதாக நாட்டினை ஆள்பவர் தவறான கற்பிதங்களை தெரிவித்து வருகின்றார்.

நாட்டை ஆள்பவருக்குக் கூட இது குறித்த சரியான புரிதலும், நிபந்தனைகள் குறித்த தகவல்களும் தெரியாது. நாட்டை ஆள் பவர்களால் அல்லது மக்களால் வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு விட்டோம் என தீர்மானித்து அறிவிப்புக்களை விடுக்க முடியாது.

சர்வதேச நிதி மதிப்பீட்டகங்கள், அங்கீகரிக்கப்பட்ட சுயாதீன நிறுவனங்களே உரிய மதிப்பீடுகளின் பிரகாரம் அறிவிப்பை விடுக்கும். இந்நிறுவனங்கள் அறிவியல், இலக்க மற்றும் தரவுகளை மையமாக வைத்து, நிதித்துறையின் பொருளாதார பின்னணி எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அதன் நேர்மறை மற்றும் எதிர்மறை அம்சங்களை ஒப்பிட்டாய்ந்து, வங்குரோத்து நிலையிலிருந்து வெளிவந்து விட்டதா? இல்லையா? என்பதை முடிவு செய்யும்.

உண்மையான தரவுகளை நாட்டுக்கு வழங்க முடியாத ஒரு தலைமைத்துவம் இருக்கும் போது, நாட்டுக்கு பொய் சொல்லி, நாட்டை ஆள்பவர்கள் தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க அனுமதி வழங்குவதா இல்லையா என்பதை குடிமக்களே தீர்மானிக்க வேண்டும். வங்குரோத்தான நாட்டில் உண்மையைப் பேச வேண்டும்.

உண்மை நிலை தெரிய வேண்டும். தந்திரமான அரசியல் முடிச்சுக்களைக் கையாண்டு தமது இருக்கையை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரே எண்ணப்பாட்டில் இருக்காது, இந்தப் பயணத்தின் ஒரே நோக்கம் 220 இலட்சம் மக்களின் வாழ்க்கையை மகிழ்ச்சியாக மாற்றுவதாக இருக்க வேண்டும்

இந்த தூய நோக்கத்துடன் தேசிய நிகழ்ச்சி நிரல் வகுக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். (ம-7.10)


## கிழவன்காடு கலாமன்றம்

காரைநகர் யாழ் கிளை

### அறநெறிப் பாடசாலை

நடாத்தும்

### தேவாரம், திருவாசகம் மனனப் போட்டி


கலாமன்றத்தின் அறநெறிப் பாடசாலையினால் வருடாந்தம் நடாத்திவரும் மாணிக்கவாசகர் குருபூசையினை முன்னிட்டு எதிர்வரும் 30.06.2024ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணி தொடக்கம் 2.00 மணிவரை மேற்குறித்த மனனப் போட்டி நடைபெறவுள்ளது. இதில் அனைத்து கலாமன்ற மாணவர்களையும் கலந்து பரிசில் மற்றும் சான்றிதழ்களைப் பெற்று பயனடையும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

பதிவாளர்
யாழ் கிளை
இல.432, K.K.S Rd,
யாழ்ப்பாணம்.
077 578 6638

பதிவாளர்
காரைநகர்

(C-0690)


## கண்ணீர் காணிக்கை



திரு. பொன்னுத்துரை கமலநாதன்

(சைவ பரிபாலன சபை உறுப்பினர், முன்னாள் பரீட்சைச் செயலாளர்)

சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளராக இருந்து கல்விக்காய் அரும்பணி ஆற்றியவர் மிகச் சிறந்த ஆளுமையாளர். எமக்கு நல் ஆலோசனைகளை வழங்கிய ஐயாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 13.05.1947 மறைவு 25.06.2024

(117)

பிரிவித்துயரில் பங்குகொள்ளும்...

தயா அச்சகம், தயா வெளியீடு
92,(150) நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

வி. தயாபரன்
(பரீட்சைச் செயலாளர், சைவ பரிபாலன சபை)

## பிள்ளை...

கண்டியில் மகாநாயக்க தேரரை சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


பிள்ளைகளின் கல்விக்காக காலை வேளையில் ஆசிரியர்கள் பாடசாலைகளில் இருக்க வேண்டியது கட்டாயமானது என்றும், எதிர்வரும் நாட்களில் அவ்வாறு நடக்காமல் போனால் ஆசிரியர் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களும், அதிபர்களும் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு முன்மாதிரியாக செயற்பட வேண்டும் எனவும், அவர்கள் போராட்டங்களிலும், வேலைநிறுத்தங்களிலும் ஈடுபடும் போது, எதிர்காலத்தில் பிள்ளைகளுக்கு அவர்களால் எவ்வாறு அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும் என சிந்திக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஒட்டுமொத்தமாக ஆசிரியர் சேவையிலிருக்கும் சகலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுக்கவில்லை என்றும் அரசியல் சார்ந்தவர்களே இதில் பங்கெடுத்திருப்பதாக தனக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதனால் ஒட்டுமொத்த ஆசிரியர் தொழிலுக்கும் களங்கம் ஏற்படுமெனவும் தெரிவித்தார்.

சிங்களப் பாடசாலைகளுக்குள் மாத்திரமே இந்த பணிப்புறக்கணிப்பு காணப்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி தமிழ், முஸ்லிம், தனியார் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் வழமைப்போல நடைபெறுவதாகவும் சுட்டிக்காட்டினார். (ம-7.10)

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 - 11 - 1949

மறைவு 26 - 06 - 2024

### முருகுப்பிள்ளை பரராஜசிங்கம்

(மாலி சந்தி இலட்சுமி ஸ்ரோஸ்)

தட்டாந்தோட்டம் வதிரியை பிறப்பிடமாகவும் அரச வீதி வதிரியை வதிவிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை பரராஜசிங்கம் அவர்கள் 26.06.2024 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - இலட்சுமிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தவனம் - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களாகிய தர்மலிங்கம், கணேசலிங்கம், சண்முகலிங்கம், தங்கத்துரை மற்றும் திலகநாயகி, பழனிப்பிள்ளை, விமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலைமதியின் அன்புக் கணவரும் மதன்ராஜ், காலஞ்சென்ற கிரிதன்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்மிளாவின் அன்பு மாமனாரும், சாருண், ரெஜானா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28.06.2024) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

(c-691)

## மரண அறிவித்தல்



பிறப்பு 29 - 11 - 1940

இறப்பு 26 - 06 - 2024

### விநாயகமூர்த்தி சுந்தரமூர்த்தி

(ஆயுள்வேத வைத்தியர் மற்றும் சமாதான நீதவான்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி மற்றும் விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி சுந்தரமூர்த்தி அவர்கள் 26.06.2024 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நமசிவாயம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நடேசன், கந்தசாமி, அன்னம்மா, புஷ்பராணி மற்றும் கதிரமலை, ராணிஅம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோதைநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பிரசன்னாவின் பாசமிகு தந்தையும் நிஷாந்தினியின் அன்பு மாமனாரும் ஆராத்யாவின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.06.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் விசுவமடுவில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விசுவமடு 12ம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விசுவமடு.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவு

### இந்திய வெளிவிவகார அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார மீட்சிக்குத் தொடர்ந்தும் ஆதரவளிக்கப்படும் என இந்தியா அறிவித்துள்ளது.

அத்துடன் முக்கிய பொருளாதாரத் துறைகளில் நீண்டகால முதலீடுகளை ஊக்குவிப்பதிலும் இந்தியா ஆதரவு வழங்கும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, ஜப்பான் , பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளை உள்ளடக்கி அமைக்கப்பட்ட அதிகாரபூர்வ கடன் வழங்குநர் குழு, கடந்த ஆண்டு முதல் இலங்கையுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியது.

அதன் பலனாக நேற்று முன்தினம் இலங்கைக்கும் கடன் வழங்குநர் குழுவுக்கும் இடையில், கடன் மறுசீரமைப்புக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதேவேளை அந்தக் குழுவின் இணைத் தலைமைகளில் ஒன்றாக, பிரான்ஸ் மற்றும் ஜப்பானுடன் இணைந்து, இலங்கைப் பொருளாதாரத்தின் ஸ்திரப்படுத்தல், மீட்சி மற்றும் வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பில் இந்தியா உறுதியாக உள்ளது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கைக்கு இந்தியா வழங்கிய 4 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியையும் இந்திய வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் சர்வதேச நாணய நிதியத்திற்கு நிதியளிப்பு உத்தரவாதங்களை வழங்கிய முதல் கடன் வழங்கும் நாடு இந்தியா எனவும் குறிப்பிட்டுள்ளது. (நி-6)

## வீதி விபத்துக்களால் நாளாந்தம் 7 பேர் உயிரிழப்பு

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் வீதி விபத்துக்களின் போது மோட்டார் சைக்கிள் விபத்துக்களாலேயே அதிகளவானோர் உயிரிழப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**

வீதி விபத்துக்களினால் நாளாந்தம் சுமார் 7 பேர் உயிரிழப்பதாக போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹபுகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

“இலங்கையில் வருடாந்தம் விபத்துக்களில் 12,000 பேர் இறக்கின்றனர். அவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் வீதி விபத்துக்களினால் மரணிக்கின்றனர்.

இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் 7 அல்லது 8 பேர் விபத்துக்களில் இறக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிள் செலுத்துனர்கள் மற்றும் பின்னால் பயணிப்பவர்களாகும்.

இலங்கையின் இளைஞர் சமூகம் 18-28 வயதுக்கு இடைப்பட்ட இளம் வயதில் இது போன்ற விபத்துக்களால் வாழ்க்கையை இழந்து வருகின்றனர். கடந்த ஆண்டு 2,310 பேர் உயிரிழந்துள்ளனர்".

வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு குடிபோதையில் வாகனம் செலுத்துவதே பிரதான காரணம் என பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹபுகொட சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

## காற்றாலை மின்உற்பத்தி திட்டத்தில் நிதி மோசடி- ஐ.ம.ச சாடல்

(கொழும்பு)

இந்தியாவின் அதானி நிறுவனம் முன்னெடுத்துள்ள மின் உற்பத்தி திட்டங்களில் பாரிய நிதிமோசடி இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

மன்னார் பூநகரியில் காற்றாலை மின்உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு இந்தியாவின் அதானி கிறீன்ஸ் எனேர்ஜி நிறுவனத்திற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளமை குறித்து ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

இலங்கையின் வலுசக்தி துறையின் காற்று வலுசக்தி துறையை ஜனாதிபதியும் அமைச்சர் காஞ்சன விஜயசேகரவும் இந்திய நிறுவனத்திற்கு வழங்கியுள்ளதால் பாரிய அளவிலான நிதிமோசடி இடம்பெறுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அதானி கிறீன்ஸ் எனர்ஜி நிறுவனம் மூலம் மன்னார் மற்றும் பூநகரியில் காற்றாலை மின்நிலையங்களை உருவாக்க முன்மொழியப்பட்ட திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தினை ஒரு கிலோ வோட்டிற்கு என்ற அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த திட்டத்தினை கேள்விப் பத்திரத்தை கோராமல் இந்திய நிறுவனத்திற்கு வழங்கியுள்ளனர் என தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இதன் காரணமாக 20 வருடங்களில் இலங்கை பல மில்லியன் டொலர்களை இழக்க வேண்டிய நிலையேற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வின்ட்போர்ஸ் என்ற நிறுவனம் காற்றுமின்சக்தி நிலையத்தை உருவாக்க முன்வந்தது அந்த நிலையம் அதானி நிறுவனத்தை விட அதிக விலையை வழங்க முன்வந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கேள்விப்பத்திர முறைகள் மூலம் இந்த நிறுவனத்திற்கு 50 மெகாவோட் காற்று மின் சக்தி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை அனுமதிவழங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## ஜனாதிபதி ரணில் ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம்



(கண்டி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று கண்டி ஸ்ரீ தலதாமாளிகைக்கு சென்று தலதாவை வழிபட்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதன் பின்னர் ஜனாதிபதி, மல்வத்து பிரிவின் பெருந்தலைவர், திப்பட்டுவே ஸ்ரீ சுமங்கல மகாநாயக்க தேரர், அஸ்கிரிய தரப்பு மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரதன நாயக்க தேரர் ஆகியோரின் ஆசிகளை பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை நாட்டின் பொருளாதார மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பில் முற்போக்கான கலந்துரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி கண்டி நகர திட்டத்தை ஆளுநர்களிடம் கையளித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## மஹிந்த ராஜபக்ஷ சீனாவிற்கு விஜயம்

(கொழும்பு)

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

பீஜிங்கில் அமைதியான சகவாழ்வுக்கான ஐந்து கோட்பாடுகளின் 70 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் நினைவேந்தல் நிகழ்வுகளில் கலந்து கொள்ள அமைச்சர் வாங் யீ விடுத்த அழைப்பின் பேரில் அவர் சென்றுள்ளார்.

இந் நிலையில் அவர் அங்கு தங்கியிருக்கும் போது சீனப் பிரதமர் லீ கியாங் மற்றும் வெளிவிவகார அமைச்சர் வாங் யீ ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தரமற்ற உணவுகள் தொடர்பில் நாடு முழுவதும் தீவிர சோதனை

### சுகாதார அமைச்சு

(கொழும்பு)

பாடசாலைகள் மற்றும் மருத்துவமனை சிற்றுண்டிச் சாலைகளில் வழங்கப்படும் உணவின் தரமற்ற நிலை குறித்த பொதுமக்களின் எதிர்ப்பு மற்றும் முறைப்பாடுகளை அடுத்து, பொது சுகாதார ஆய்வாளர்கள், நாடு முழுவதும் தீவிர சோதனைகளை ஆரம்பித்துள்ளதாக பொது சுகாதார ஒன்றியத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

களில் வழங்கப்படும் உணவின் தரம் பற்றி பல முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொள்கை வழிகாட்டுதல்களின் கீழ், அதிக சர்க்கரை, அதிக உப்பு மற்றும் அதிக கொழுப்புள்ள உணவுகளை கட்டுப்படுத்தவும், அத்துடன் நொறுக்குத் தீனிகளை அகற்றவும் பாடசாலை சிற்றுண்டியகங்கள் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விதிமுறைகள் இருந்தபோதிலும், அவை புறக்கணிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என உபுல் ரோஹன சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பாடசாலை மற்றும் மருத்துவமனைகளின் சிற்றுண்டியகங்களில் தரமற்ற உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டால், அது தொடர்பில் 011 211 2718 என்ற எண்ணுக்கு முறைப்பாடுகளை தெரிவிக்குமாறு, சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொறியியலாளர்களுக்கான கிரிக்கெட் நாளை ஆரம்பம்




இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் வடக்கின் அத்தியாயம் வருடந்தோறும் வடக்குப் பொறியியலாளர்களுக்கு இடையில் நடத்தும் கிரிக்கெட் திருவிழாவான Northern Engineers Premier League நாளை சனிக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானம் மற்றும் மட்டுவில் மகாவித்தியாலய மைதானம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளது.

சுற்றுப்போட்டிக்கான வெற்றிக்கிண்ண அறிமுகம் அணிகளின் சீருடை அறிமுகம் மற்றும் இலட்சனை அறிமுகம் ஆகியவை நேற்று முன்தினம் யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து, நடத்திய ஊடக சந்திப்பில் கிரிக்கெட் சுற்றுப்போட்டி தொடர்பில் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் 150 பொறியியலாளர்களை உள்ளடக்கி 8 அணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அவற்றுக்கு இடையிலான 8 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்று போட்டியாக போட்டிகள் நடைபெற்று, அன்றைய தினமே அரையிறுதி இறுதி போட்டிகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-6-33)




# முதல் முறையாக இறுதி போட்டிக்கு முன்னேறியது தென்னாபிரிக்கா



ஆப்கானிஸ்தானை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தென்னாபிரிக்கா தகுதி பெற்றுள்ளது. ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் முதல் அரையிறுதியில் ஆப்கானிஸ்தான் - தென்னாபிரிக்கா அணிகள் மோதியது. இதில் டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் பட்டிங்கை தேர்வு செய்தது.

அதன்படி களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி, தென்னாபிரிக்காவுக்கு நெருக்கடி கொடுக்கும் என எதிர்ப்பார்க்கப்பட்ட நிலையில் அதற்கு மாறாக முதல் ஓவரில் இருந்தே விக்கெட்டுகளை பறிகொடுத்தனர்.

இதனால் ஆப்கானிஸ்தான் அணி 11.5 ஓவரில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக ஓமர்சாய் 10 ரன்கள் எடுத்தார். தென்னாபிரிக்கா தரப்பில் யான்சன், ஷம்ஸி தலா 3 விக்கெட்டும் ரபாடா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதனையடுத்து எளிதான இலக்குடன் தென்னாபிரிக்கா அணி களமிறங்கியது. தொடக்கம் முதலே திணறிய டிகாக் 8 பந்தில் 5 ரன்களில் ஆட்டமிழந்தார். அதனை தொடர்ந்து ஹெண்ட்ரிக்ஸ் மற்றும் கப்டன் மார்க்ரம் ஜோடி பொறுப்புடன் ஆடி அணியை வெற்றி பாதைக்கு அழைத்து சென்றனர். இதனால் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (ரி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3153

**யூட்சன்**

டாக்டர் நேற்று என்னையும் என் பையனையும் பாம்பு கொத்திற்று அப்புறம் என்ன செஞ்சீங்க



அப்புறம் தாயமும் ஐந்தும் போட்டு ஏணியில் ஏறி விட்டேன்

**மெர்வின்**


வாயில்லாத ஜீவன்களை சித்திரவதை செய்யக் கூடாது



நீ மட்டும் அப்பாவை சித்திரவதை செய்யலாமா?

**பிரீத்தி**

பச்சோந்தி ஒன்று தற்கொலை செய்யும் முன் இவ்வாறு எழுதி இருந்தது....



நிறம் மாறும் போட்டியில் மனிதர்களிடம் நான் தோல்வி அடைந்தேன்

**விது**

நீங்கள் சொல்வது சரியாக இருக்கலாம் ஆனால் பிறர் கூறுவது தவறு என்று கூறக்கூடாது




அவர்களின் பக்கம் சிந்தித்துப் பார்த்தால் புரியும் அது சரியா? தவறா? என்று

**சாயினி**




**சஞ்சய்**

வேலைக்கு போறேன்...
வீட்டுக்கு வாறேன்...
சாப்பிடுறேன் தூங்குறேன் ...
Repeatu...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8,435 பேருக்கு

## ஜூலையில் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்காலிக, சாதாரண, மாற்று, ஒப்பந்தம் மற்றும் சலுகை அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நிரந்தர ஓய்வூதியத்துடன் நியமனங்களை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது குறித்து பிரதமரும், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்தனவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளில் தற்காலிக, சாதாரண, மாற்று, ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் பணியாற்றும் 8,435 பேர் நிரந்தர நியமனம் பெறவுள்ளனர்.

நியமனக் கடிதங்களை விரைவாக வழங்குவதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அண்மையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

அதன்படி, அந்த நியமனக் கடிதங்கள் அனைவருக்கும் ஜூலை மாதத்தில் வழங்க முடிவு செய்யப்பட்டது. (நி-6)

# அக்கராயன் தாழ்பாலத்தினை மேம்பாலமாக மாற்றித் தாருங்கள்

## மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் தாழ் பாலம் மேம்பாலமாக மாற்றப்படாது இருப்பதன் காரணமாக இப்பிரதேச மக்கள் மழை காலத்தில் பெரும் நெருக்கடியினை எதிர்கொள்கின்றனர்.

அக்கராயன் குளத்தின் 600 அடி நீளமான வான்பகுதி வழியாக வெளியேறும் வான் வெள்ளம் திருமுறிகண்டி அக்கராயன் வீதியில் உள்ள 25 அடி நீளமான வான் வழியாக வெள்ளம் வெளியேற முடியாமல் 250 மீற்றர் வரை வீதியினை மூடி வெள்ளம் பாய்வதன் காரணமாக அக்கராயன் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் வண்டி உட்பட அனைத்து வாகனங்களும் மாற்று வழிகளை பயன்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும்.

இந்நிலையில் கடந்த 14 ஆண்டுகளாக தாழ்பாலத்தினை மேம்பாலமாக மாற்றுங்கள் என மக்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு வருகின்றது. இனியாவது கரிசனை கொண்டு இவ்விடயத்தில் உரிய தரப்புகள் நடவடிக்கை எடுத்து தாழ்பாலத்தினை மேம்பாலமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண் டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)


**லங்கா மஹறால் (PVT) LTD**

**DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

(1344)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974




தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் ம.மணிசேகரத்தின் மணிவிழா நிகழ்வு அண்மையில் கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. (படம்: ஈச்சமோட்டை செய்தியாளர்)






# இராசிபலன்

28.06.2024
ஆனி 14, வெள்ளிக்கிழமை
சப்தமி முன்னிரவு 6.28 மணிவரை

பூரட்டாதி பிற்பகல் 12.29 மணிவரை
சுபநேரம் 5.55-7.25 மணி வரை
இராகுகாலம் 10.25-11.55 மணிவரை

சந்திராஷ்டமம்- பூசம், ஆயிலியம்

வளவன்

**மேஷம்** – தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள்

**கடகம்** – விட்டுப் போன பணிக்களை இன்று செய்து முடிப்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**துலாம்** – தலைமைப் பதவிகள் உங்களைத் தேடிவரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** – பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** – பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** – வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உதவி செய்து சிலர் உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்

**கும்பம்** – கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கன்னி** – மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு** – மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும்.

**மீனம்** – குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நட்டை இழப்பதைவிட கொஞ்சம் பணத்தை இழப்பது மேலானது.

# யாழில் இடம்பெற்ற விசேட நடமாடும் சேவை



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுவின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் இதுவரை பிறப்புப் பதிவு செய்யாத சிறுவர்கள் மற்றும் ஏனைய நபர்களிற்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் பிறப்புப் பதிவு செய்யும் விசேட நடமாடும் சேவை நிகழ்வானது மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர் செல்வி. உ.தர்சினி, பிரதி பதிவாளர் நாயகம் கே.நடராஜா, மேலதிக மாவட்ட பதிவாளர்கள், மாவட்ட செயலக பதிவாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். அதேவேளை இவ் நடமாடும் சேவை மூலமாக 83 பயனாளிகள் பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

## 1008 சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு கந்த சுவாமி கோவில் (முனி கோவில்) 1008 சங்காபிஷேகம் நாளை சனிக் கிழமை பகல் இடம்பெற்று மாலை வசந்த மண்டப பூசையினை தொடர்ந்து திருக் கல்யாண நிகழ்வு இடம்பெற்று சுவாமி வீதி வலம் வரும் காட்சி இடம் பெறவுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி அலங்கார உற்சவத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (நி-6)



சாவகச்சேரி சங்கத்தானை வைரவ சுவாமி கந்தசுவாமி கோவில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழா கடந்த திங்கட்கிழமை இரவு ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்- சுபேசன்)

## பெறுகைகளுக்கான அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

### வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகைகள்-

### 2024.08.01 தொடக்கம் 2025.06.30 வரை

தலைவர், பிராந்திய பெறுகைக்குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு , சமைத்த உணவு வழங்குவதற்குத் தகமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவைவழங்கவேண்டியநிலையம் | கேள்விஉத்தரவாதமுறி |
|---|---|---|---|---|
| 01. | NP/21/05/Dict/JF/ 03/2024-2025 | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலை (அனலைதீவு) | 25,000.00 |
| 02. | D/JF/2024/02 | உலர் உணவுவழங்கல் சேவை | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | 260,000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம் பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் / சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, 572/3 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலும் 021 222 6253, 021 221 4966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ்முகவரியில் வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் 28.06.2024 ஆம் திகதி முதல் 11.07.2024 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாகச் ரூபா3,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 12.07.2024 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 05.07.2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

(சி-686)

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன், தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்.**

**[illegible]725, 021-222-6253, 021-221-4966**

**தொலைநகல்: 021-222-9971 மின்னஞ்சல்: rdhsjaffna15@gmail.com**

# மிருசுவில் வீரபத்திரேஸ்வரர் ஆலய மஹோற்சவம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி மிருசுவில்-கொடிபேலி கிழக்கில் அமைந்துள்ள தரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலய மஹோற்சவப் பெருவிழா கடந்த 6 ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 12 நாட்கள் இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் ஜுலை மாதம் 1 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத்திருவிழாவும் 2 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழா வும்,3 ஆம் திகதி புதன் கிழமை கடல் தீர்த்தமும்,4 வியாழக்கிழமை பட்டுத் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (நி-6-30)



**சுன்னாகம் பாரம்பரிய றோட்டரிக் கழகத்தின் இதழான கமலி-02 இதழ் வெளியீட்டு விழா வைபவம் கழகத்தின் தலைவர் கிங்ஸ்லி தலைமையில் கடந்த திங்கட்கிழமை சுன்னாகத்தில் இடம்பெற்றது.** (படம்-சுபேசன்)

# ஆண்டு விழா


(யாழ்ப்பாணம்)

தென்கயிலை உலக சமாதான ஆலயத்தின் யாழ்.கிளையின் 5 ஆம் ஆண்டு தொடக்க விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். திருநெல்வேலி, ஆடிய பாதம் ரோடு, சிவகாமி மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் தென்கைலாய உலக சமாதான ஆலயத்தின் உலக அமைதி தூதுவர் குருமகானின் அருளுரையும் இடம்பெறும். (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையும், ஆளுமைத்திறனும் மிக்க அதிபர் பொ. கமலநாதன்



25.06.2024 அன்று காலமான ஓய்வு நிலை அதிபர் பொ.கமலநாதன் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து 13.05.2007 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். அவரின் சேவைச் சிறப்பைப் பாராட்டி 15.07.2007 ஆம் ஆண்டு வீரகேசரிப் பத்திரிகையின் வார மலரில் நல்லையா விஜயசுந்தரம் அவர்களால் எழுதப்பட்ட இக் கட்டுரையானது பொ.கமலநாதன் அவர்களின் இறுதி நிகழ்வு நடைபெறுகின்ற இன்றைய (28.06.2024) நாள் மீள் பிரசுரமாகின்றது.

ஓய்வுக்குப் பின்னர் அதிபர் கமலநாதன் அவர்கள் ஆற்றிய சமய, சமூகப் பணிகள் போற்றுதற்குரியவை.

அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளராக பதினொரு ஆண்டுகள் இருந்து அவர் ஆற்றிய அர்ப்பணிப்பான சேவை காலத்தால் நினைவு கூரத்தக்கவை.

ஆயினும் இக் கட்டுரை 17 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது என்பதால் அவரின் பிற்கால சேவைகள் இக் கட்டுரையில் இடம்பெறவில்லை என்பதை கருத்திற் கொள்ளவும்.

-ஆசிரியர்

யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிரபல்யமான கல்லூரிகளில் முதன்மையானது.

இக் கல்லூரியின் அதீத வளர்ச்சிக்கும், மதிப்பிற்கும் மூல காரணமாக இருந்தவர்கள் இக் கல்லூரியை வழிப்படுத்திய அதிபர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

அவ் வரிசையில் கடந்த ஒரு தசாப்த காலமாக கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி கடந்த மே 2007 இல் ஓய்வுபெற்ற அதிபர் பொ.கமலநாதன் அவர்களின் கல்விப் பணி பாராட்டுதற்கும் போற்றுதற்கும் உரியது.

நேர்மை என்ற மகுடத்தின் கீழ் பணிவு, பிறரை மதிக்கும் பண்பு, அடக்கம், தீர்மானம் எடுக்கும் ஆளுமைத்திறன் என அனைத்து உயர் பண்புகளின் உரித்தாளராக இருந்து தனது பணியை நிறைவாகவும் சிறப்பாகவும் ஆற்றினார்.

சமகாலத்து அதிபர்கள் மத்தியில் உதாரண சிற்பியாக கல்வித் திணைக்கள அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்படும் அதிபர் பொ.கமலநாதன் அவர்கள் தனது சேவைக் காலத்தில் சிறந்த ஆசான், புகழ்பூத்த அதிபர் என்ற பெருமையையும் பாராட்டையும் கல்விச் சமூகத்தால் பெற்றுக்கொண்டவர். அவரின் நிர்வாகத் திறமையும், தலைமைத்துவப் பண்பும், கல்வித் திணைக்கள அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மத்தியில் தனித்துவமான மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் அவரை உள்ளாக்கியது.

சமகால சூழ்நிலையில் யாழ்.குடாநாட்டில் பிரபல்யமான பாடசாலைகளில் ஆற்றக்கூடிய அதிபர் பணி என்பது சாதாரணமான விடயமல்ல.

போர்ச் சூழலிலும், கொக்குவில் இந்துக் கல்லூரியின் பெருமையையும், புகழையும் பாதுகாத்து கல்லூரியை உயர்வடையச் செய்த பெருமை அதிபர் கமலநாதன் அவர்களுக்கே உரியதாகும். அவரின் பணிக்காலத்தில் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத் தொகுதி அவரின் சேவைக் காலத்தின் உயர் பெறுமானக் குறியீடாகும்.

பழைய மாணவர்களாலும் உலகளாவிய ரீதியில் இருக்கக் கூடிய கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களினாலும் அமைக்கப்பட்டு உயர்ந்து நிற்கும் கட்டடத் தொகுதியானது, கல்லூரியின் பழைய மாணவர்களுடன் அதிபர் கமலநாதன் அவர்கள் கொண்டிருந்த நல்லுறவையும் அவர் மீது பழைய மாணவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையையும் சான்றுப்படுத்தும்.

கல்லூரியின் இலண்டன் பழைய மாணவர் சங்கக் கிளை அதிபர் கமலநாதனை இலண்டனுக்கு அழைத்து கௌரவித்தமையும், இலண்டன் சென்ற அதிபர் கல்லூரியின் வளர்ச்சியில் பழைய மாணவர்களை மென்மேலும் ஈர்த்துக்கொண்டமை அவரின் செய் கருமச் சிறப்பிற்கு சிறு உதாரணமாகும்.

ஆரவாரமின்றி அமைதியாகப் பத்து ஆண்டுகள் அதிபர் பணியாற்றிய கமலநாதன் அவர்களின் சிறந்த பணியை- உயர்ந்த குணத்தை - ஆளுமைத்திறத்தை புகழ்ந்து உச்சாடனம் செய்யாத ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் இல்லையென்றே கூறலாம். அந்தளவிற்கு எல்லோரையும் சம கண்கொண்டு பார்க்கும் சான்றாண்மையும் மனிதநேயமும் இரக்க சிந்தையும் அவரின் அணிகலன்களாக இருந்தன.


கடந்த பத்து ஆண்டுகளில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அமையப் பெற்ற மூன்று மாடிக் கட்டடத் தொகுதி, கேட்போர் கூடம், படிப்பகம், கணனிப் பயிலகம், சிறுவர் நூலகம், ஆடுகளம் என்ற பட்டியல் தொகுதி அவரின் பெருமைக்கும், அவரின் ஆளுமைத்திறத்தை ஆய்வு செய்வதற்குமான சான்றாதாரங்களாகும்.

தலை சிறந்த அதிபருக்கு இருக்கக்கூடிய அனைத்துப் பண்புகளையும் ஒருங்கே கொண்டு விளங்கிய அதிபர் கமலநாதனின் சேவை, போற்றுதற்கு மட்டுமன்றி நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எழுச்சி பெறக் கூடிய அதிபர்களுக்கான வழிகாட்டியாகவும் அமையும் என்பது உறுதி.

**- நல்லையா விஜயசுந்தரம்**

# அரச உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதே அரசின் எதிர்பார்ப்பு

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளதாவது "ஒவ்வொரு துறையிலும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காக முறையான முறைமை ஒன்றை பின்பற்றுகின்றோம்.

அதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் நியாயமான பதில் வழங்கப்படும். சுமார் நான்கு வருடங்களாக தொழில்சார் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு பதிலாக மக்களின் உயிரைக் காப்பாற்றும் போராட்டத்தையே அரசாங்கம் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

தேர்தல் காலங்களில் கோரிக்கையை வென்றெடுக்ககூடிய சூழல் உருவாகும் என்பதை தொழிற் சங்கங்கள் நன்கு அறிந்திருப்பதால், ஒரு குழுவினர் இதனை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி போராட்டங்களை முன்னெடுக்கின்றனர்" இவ்வாறு ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (நி-6)

**Kilinochchi District Secretariat**
**INVITATION FOR BIDS (IFB)**
**Servicing of Vehicles, Cleaning Services, Security Services & Insurance of Vehicles**

The Chairman of Departmental Procurement Committee of the Kilinochchi District Secretariat invites sealed bids from interested eligible and qualified bidder for the above services.

1. A complete set of Bid document will be issued from 01.07.2024 up to 22.07.2024 on working days of the Week from 9.00a.m. to 3.00.p.m
2. Bids will be received up to 10.00 a.m on 24.07.2024.
3. All full particulars of the above could be obtained from the website and below link.

(C-685)

Chairman,
Departmental Procurement Committee.
Kilinochchi. District Secretariat.
T.P Fax: 021 228 5352. Web http://www.kilinochchi.dist.gov.lk/images/bid/bid-2024.pdf

கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 13.05.1947
மறைவு 25.06.2024

அமரர். பொன்னுத்துரை கமலநாதன்
(ஓய்வு நிலை அதிபர்-யூனியன் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி)

கடந்த 14 ஆண்டுகளாக பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வலிகாமம் தெற்கு [உடுவில்] பிரதேச செயலாளர் பிரிவுச் சங்கத்தின் பொருளாளராகவும் பணியாற்றிய அமரர் அவர்கள் எமது நிதியத்தின்யாழ்ப்பாண மாவட்டத் தலைவராகவும் பெருந் தொண்டாற்றியவர் ஆவார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச செயலாளர் பிரிவுச் சங்கத்தினர்

(115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உடல் நலக்குறைவால் அத்வானி மருத்துவமனையில்



(டில்லி)

பா.ஜனதா மூத்த தலைவர் எல்.கே.அத்வானிக்கு ஏற்பட்ட திடீர் உடல்நலக் குறைவு காரணமாக எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் துணைப் பிரதமரும், பா.ஜனதா மூத்த தலைவருமான எல்.கே. அத்வானிக்கு நேற்று முன்தினம் இரவு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அவர் உடனடியாக சிகிச்சைக்காக, அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தில் (எய்ம்ஸ்) அனுமதிக்கப்பட்டுள்ளதாக, மருத்துவமனை அறிக்கை ஒன்றில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

96 வயதான பா.ஜனதா மூத்த தலைவரான எல்.கே. அத்வானிக்கு டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிறுநீரக துறையை சேர்ந்த மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருவதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

தற்போது அவரது உடல் நிலை சீராக உள்ளதாகவும், மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-6)

## லெபனானை கற்காலத்திற்கு அனுப்புவோம் இஸ்ரேல் கடும் எச்சரிக்கை

(ஜெருசலேம்)

லெபனானை மீண்டும் கற்காலத்திற்கு அனுப்புவோம் என இஸ்ரேல் எச்சரித்துள்ளது.



லெபனானில் யுத்தமொன்றை விரும்பவில்லை எனினும் லெபனானை கற்காலத்திற்கு அனுப்ப முடியும் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

வோஷிங்டனிற்கான விஜயத்தின்போது இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலன்ட் இதனைத் தெரிவித்துள்ளார். தனது நாட்டினால் லெபனானை கற்காலத்தினை நோக்கி தள்ள முடியும் ஆனால் அதனை செய்ய விரும்பவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் யுத்தத்தை விரும்பவில்லை ஆனால் நாங்கள் அனைத்து சூழ்நிலைகளுக்கும் எங்களை தயார்படுத்துகின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தமொன்றை ஆரம்பித்தால் லெபனானிற்கு எங்களால் பேரழிவை ஏற்படுத்த முடியும் என்பது ஹிஸ்புல்லா அமைப்பிற்கு தெரியும் என இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் ஏழாம் திகதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலின் பின்னர் இஸ்ரேல் யுத்தத்தை ஆரம்பித்தது முதல் இஸ்ரேல் லெபனான் எல்லையில் ஹிஸ்புல்லா அமைப்பிற்கும் இஸ்ரேலிய படையினருக்கும் இடையில் நாளாந்தம் மோதல்கள் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில வாரங்களாக இந்த மோதல்கள் தீவிரமடைந்துள்ளதைத் தொடர்ந்து முழுமையான யுத்தம் குறித்த அச்சம் உருவாகியுள்ளது. இஸ்ரேல் லெபனானை தாக்குவது குறித்து எச்சரித்துள்ளதைத் தொடர்ந்து ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரும் பதில் எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஹிஸ்புல்லா இஸ்ரேல் மோதல்கள் முழுமையான யுத்தமாக வெடிப்பதை அமெரிக்கா உட்பட இஸ்ரேலின் முக்கிய சகாக்கள் விரும்பாதது குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பில் லெபனான் இஸ்ரேல் உட்பட அனைத்து தரப்பினருடனும் அமெரிக்கா தீவிரபேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக வோஷிங்டனில் அமெரிக்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## பணத்தின் மீது காதலியை நடக்க வைத்த தொழிலதிபர்

### வைரலாகும் வீடியோ



(மொஸ்கோ)

ரஷ்யாவை சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் பணக்கட்டுகளை கம்பளமாக விரித்து அதன் மீது தனது காதலியை நடக்க வைத்த வீடியோ இன்ஸ்டாகிராமில் வைரலாகி வருகிறது.

"மிஸ்டர் நன்றி" என்ற பெயரில் பிரபலமானவராக அரியப்படும் செர்ஜி கோசென்கோ என்பவர் இன்ஸ்டாகிராமில் இந்த வீடியோவை பகிர்ந்துள்ளார். அதில் தொழிலதிபரின் காதலி ஒரு ஹெலிகாப்டரில் வந்து இறங்குகிறார்.

அவர் ஹெலிகாப்டரில் இருந்து இறங்கும் போது பணக்கட்டுகளை படிக்கட்டுகளாக அடுக்கி வைத்த தோடு மட்டுமல்லாமல் கம்பளம் போன்று பணக்கட்டுகளை விரித்து வைத்திருக்கும் காட்சிகள் உள்ளது.

அந்த பணக்குவியலின் மீது தொழிலதிபரின் கையை பிடித்தபடி காதலி நடந்து செல்லும் காட்சிகள் வீடியோவில் இடம்பெற்றுள்ளது.

இந்த வீடியோ 4.3 கோடிக்கும் அதிகமான பார்வைகளை பெற்றது. பயனர்கள் பலரும் தொழிலதிபரின் செயலை விமர்சித்து பதிவிட்டு வருகின்றனர். பணத்தின் மதிப்பை புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள் என ஒரு பயனரும், இது மிகவும் மோசமானது. பணத்தை அவமதிப்பது வெட்கக்கேடானது என சில பயனர்களும் பதிவிட்டுள்ளனர். (நி-6)

## 450 ...

## பறி...

### கரா...

(இஸ்லாமாபா...

பாகிஸ்தானின் ...
தாக்கியதில் கட...
உயிரிழந்தாக ஒ...
தெரிவித்துள்ளது...

பாகிஸ்தானின் துறைமுக நகரமான கராச்சி கடந்த சனிக்கிழமை முதல் கடுமையான வெப்பமான காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மூன்றாவது நாளாக 40 டிகிரி செல்சியஸைத் தாண்டி ...

## கென்யா கல...
## 27 பேர் உ...



(கென்யா)

கென்யாவில் அரசுக்கு எதிராக இடம்பெற்ற கலவரத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளதாக மனித உரிமை ஆணையம் தெரிவித்துள்ளது.

கென்யாவில் நிலவி வரும் கடுமையான பொருளாதார நெருக்கடியின் காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் வரியை உயர்த்தப் போவதாக அந் நாட்டின் அரசு அறிவித்திருந்தது.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் வரி உயர்வு சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்டு சட்டம் நிறை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 நாட்களில்


# 0 பேரின் உயிர்களை

# ித்த வெப்ப அலை!

## ராச்சியில் சோகம்

(பாத்)

**ின் மிகப்பெரிய நகரமான கராச்சியில் வெப்ப அலை கடந்த நான்கு நாட்களில் 450 இற்கும் மேற்பட்டோர் க ஒரு முன்னணி தன்னார்வத் தொண்டு நிறுவனம் ளது.**



வெப்ப அலை வீசி வருகிறது. குறிப்பாக, கடலோரப் பகுதிகளில் மிக அதிகமாக வெப்பநிலை வீசுகிறது.

இதுகுறித்து, அறக்கட்டளையின் தலைவர் பைசல் எதி கூறுகையில், "கராச்சியில் அறக்கட்டளையின் கீழ் நான்கு சவக்கிடங்குகள் செயற்படுகின்றன.

மேலும் எங்கள் பிணவறைகளில் அதிக உடல்களை வைக்க இடமில்லாத நிலையை நாங்கள் அடைந்துள்ளோம்.

வருத்தமான உண்மை என்னவென்றால், இந்த உடல்களில் பல கடுமையான வானிலையிலும், நிறைய சுமை கொட்டும் பகுதிகளில் இருந்து வந்தவை.

பெரும்பாலான உடல்கள் வீடற்றவர்கள் மற்றும் தெருக்களில் போதைக்கு அடிமையானவர்களுடையது.

இந்த மக்கள் நாள் முழுவதையும் தங்களின் வாழ்வாதாரத்திற்காக முழு நாளையும் செலவிடுவதால் தீவிர வெப்ப அலை அவர்களுக்கு ஏற்பட்டது என அவர் தெரிவித்தார். (நி-6)

## கலவரத்தில்
## உயிரிழப்பு



வேற்றப்படவிருந்தது. இந்த தீர்மானத்தை எதிர்த்து நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி நேற்று முன்தினம் கென்யா பாராளுமன்றத்தில் வரி உயர்வு சட்டமூலம் மீதான விவாதம் நடந்து கொண்டிருந்த போது ஆயிரக்கணக்கான மக்கள் பாராளுமன்றத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டதோடு, அங்கிருந்த தடுப்புகளையும் உடைத்துக் கொண்டு உள்நுழைந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் பாராளுமன்ற கட்டடத்துக்கு தீ மூட்டப்பட்டது. கட்டடத்தில் தீ வேகமாக பரவியதையடுத்து போராட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசி, நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டும் போராட்டக்காரர்கள் கலைந்து செல்லாத காரணத்தால், போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 27 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கென்ய பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வரி உயர்வு சட்டமூலம் திரும்ப பெறப்படுவதாக அந்நாட்டு ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## மீண்டும் பறக்கவிடப்பட்ட பலூன்களால் மூடப்பட்ட சியோல் விமான நிலையம்


(சியோல்)

வடகொரியாவில் இருந்து மீண்டும் பறக்கவிடப்பட்ட கழிவுகளுடனான பலூன்களால் தென் கொரியாவின் சியோல் விமான நிலையம் மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வடகொரியாவின் இந்த செயற்பாட்டின் காரணமாக தென் கொரியாவின் சியோல் விமான நிலைய போக்குவரத்து சுமார் 3 மணி நேரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, வடகொரியாவில் பலூன் ஒன்று சியோல் விமான நிலையத்தின் பயணிகளுக்கான இரண்டாவது முனையத்தில் தரையிறங்கியுள்ளதுடன் மூன்று பலூன்கள் ஓடுதளத்தில் தரையிறங்கியுள்ளன.

இதன் காரணமாகவே சியோல் விமான நிலையத்தின் விமான சேவை பாதிக்கப்பட்டு நேற்று முன்தினம் தற்காலிகமாக மூடப்பட்டது.



கடந்த மே மாத இறுதியில் இருந்தே தென் கொரியாவிற்குள் குப்பைகள் நிரப்பிய பலூன்களை வட கொரியா பறக்கவிட்டு வருகிறது. பல நூறு பலூன்கள் தென் கொரியாவின் பல பகுதிகளில் தரையிறங்கியுள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் சியோல் விமான நிலைய எல்லையிலும் அதைச் சுற்றியும் பல பலூன்கள் காணப்பட்டன. வடகொரியாவால் சியோல் விமான நிலையம் மூடப்படுவது இது முதல் முறையல்ல என்றே அதிகாரிகள் தரப்பில் குறிப்பிடுகின்றனர்.

சுமார் 100 பலூன்கள் தரையிறங்கியதாகவும் பெரும்பாலான பலூன்களில் காகிதக் குப்பைகளே காணப்பட்டுள்ளதாகவும் தென் கொரியாவின் இராணுவம் தெரிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றாக எரிந்த நிலையில் மோட்டார் சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வெற்றுக் காணி ஒன்றில் இருந்து முற்றாக எரிந்த நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

உடுவில் தெற்கு பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள வெற்றுக் காணி ஒன்றில் மோட்டார் சைக்கிள் ஒன்று முற்றாக எரிந்த நிலையில் காணப்படுவதாக, சுன்னாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடு என நம்பப்படும் இலக்கத் தகடு ஒன்று காணியின் பிறிதொரு இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இலக்க தகட்டின் அடிப்படையில், உரிமையாளரை கண்டறிவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

# மீன்பிடி தொழிலில் ஈடுபட்ட சிறுவர்கள்

## படகு உரிமையாளருக்கு அபராதம்

(கொழும்பு)

ராமேஸ்வரம் மீன்பிடி துறை முகத்தில் இருந்து மீன்பிடிக்க செல்லும் விசைப்படகில் 18 வயதுக்கு கீழ் உள்ள 8 சிறுவர்களை தொழிலாளர்களாக பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டு படகு உரிமையாளர்களுக்கு தலா ரூபாய் 20 ஆயிரம் அபராதம் விதித்ததுடன், அரசு வழங்கும் மானிய டீசல் மற்றும் மீன்பிடி அனுமதிச்சீட்டு ரத்து செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

ராமேஸ்வரம் மீன் பிடித் துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்று நேற்று காலை கரை திரும்பிய 8 மீன்பிடி படகுகளில் 8 சிறுவர்கள் மீன் பிடித் தொழில் பயன்படுத்தப்பட்டது தெரியவந்தது.

இதையடுத்து அந்த எட்டு சிறுவர்களை மீட்ட தொழிலாளர் அமுலாக்கப் பிரிவு உதவி ஆணையர் தலைமையில் அதிகாரிகள், சிறுவர்கள் மீன் பிடி தொழிலுக்கு வரக்கூடாது, பள்ளிக்கு செல்லுமாறு அறிவுரை வழங்கியதுடன் இவர்களை மீன்பிடி தொழிலில் பயன்படுத்திய விசைப்படகின் உரிமையாளர்களுக்கு தலா ரூபாய் 20 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. (நி-6-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 380 | 320 | 200-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 150 | 120-150 | 200 |
| தக்காளி | 700 | 750 | 700 | 550 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 150 | 100-120 | 200 |
| கோவா | 100 | 300 | 250 | 250 | 200 |
| கரட் | 450 | 450 | 650 | 400 | 600 |
| பூசணி | 160 | 200 | 150 | 130 | 200 |
| புடோல் | 150 | 300 | 200 | 150 | 300 |
| வாழைக்காய் | 150 | 200 | 140 | 80-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 400 | 300-550 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 250 | 250 |
| பாகற்காய் | 1200 | 900 | 1200 | 700 | 1200 |
| வெண்டக்காய் | 200 | 250 | 180 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 180 | 150 | 160 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 150 | 250 |
| லீக்ஸ் | 550 | 700 | 700 | 400 | 600 |
| பீற்றூட் | 800 | 600 | 600 | 500 | 800 |
| கறிமிளகாய் | 600 | 900 | 700 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 2000 | 2000 | 1200 | 1400 | 1200 |
| போஞ்சி | 750 | 700 | 600 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 60 | 80 | 120 | 50-70 | 80 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1200 | 800-1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 500 | 400 | 300 | 400 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 140 | 220 | 200 | 300 | 300 |
| பொன்னாங்காணி | 60 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 180 | 120 | 100 | 250 |

# இன்று ஒரு தகவல் 166



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## குழந்தை சுபாவம்

ஒருவர் தன்னுடைய சினேகிதரை கடைத்தெருவிலே சந்தித்தார். குடும்ப விடயங்களை பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார். கடைசியாக கடைக்குட்டிப் பையன் எப்படி இருக்கிறான் என்று கேட்டார். அவர் தான் எனக்கு பெரிய தலைவலி! வால் ஒன்று தான் பாக்கி அவனுக்கு! ஏதாவது குறும்பு செய்து கொண்டே இருக்கிறான். என்ன செய்வது என்று தெரியவில்லை என புலம்ப ஆரம்பித்தான். பொதுவாக குழந்தைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுப்பது பெற்றவர்களின் கையிலே தான் இருக்கிறது. சின்ன வயதிலே அவனை உதைக்கச் சொல்லிக் வேடிக்கை பார்ப்பது! அவன் பெரியவனாகி உதைக்க வந்தான் என்றால் வருத்தப்படுகின்றது.

அதற்கு யார் சார் பொறுப்பு? சின்னப் பிள்ளைகளுக்கு திட்டுவது எப்படி என்று சொல்லிக் கொடுத்து அவர்கள் திட்டும் போது அதை ரசிக்கும் பெரியவர்கள் இப்போதும் எத்தனையோ பேர் உண்டு. அந்த சின்னப்பிள்ளை பெரியவனாக ஆனதன் பின்பு அதே வார்த்தையைச் சொல்லி அப்பாவை திட்டினால் பெரியவர்களை மதிக்கத் தெரியவில்லை என்று சொல்லுவது. இதுதான் நமது வழக்கம். சரி இப்போது விடயத்திற்கு வருவோம். கொஞ்சம் நிதானமாக யோசித்து பாருங்கள். குழந்தைகள் உடம்பு நன்றாக இருக்க வேண்டும் என்பதில் தான் நாம் அக்கறை செலுத்துகின்றோம். மனமும் நன்றாக இருக்க வேண்டும் என யோசித்து அதற்கு தகுந்த மாதிரி நாம் எதுவும் செய்வதில்லை. இப்போது உள்ள பல குடும்ப பிரச்சினைகளுக்கு இது ஒரு முக்கிய காரணம். குழந்தைக்கு பால் கொடுக்கின்றோம். பழம் கொடுக்கின்றோம்.

பழக்கவழக்கத்தைப் பற்றி யார் யோசிக்கிறார்கள். ஒரு குழந்தைக்கு நல்ல பழக்கவழக்கத்தை கற்றுக்கொடுப்பது எப்படி? அது ஒன்றும் பெரிய வேலையில்லை . கொஞ்சம் கவனம் வேண்டும் அவ்வளவு தான். ஒரு குழந்தை நல்ல விதமாக நடந்து கொண்டால் உடனே அதனை பாராட்ட வேண்டும். சிரித்த முகத்துடன் அதனை தட்டிக் கொடுக்க வேண்டும். அவன் ரொம்ப நல்ல பையன் என்று நீங்கள் நினைப்பதை அவன் புரிந்து கொள்ளும் மாதிரி ஏதாவது செய்ய வேண்டும். ஆனால் நாம் எதிர்மறையாக நடந்து கொள்கிறோம். ஒரு குழந்தை நல்ல விதமாக நடந்து கொண்டால் அதனை பாராட்டுவதில்லை. ஆனால் ஏதாவது தப்பு செய்தால் மட்டும் உடனே கண்டிக்கின்றோம். பையனை கடைத்தெருவுக்கு அழைத்துக் கொண்டு போறீர்கள். அவன் மிகவும் மெதுவாக சாலை ஓரம் நடந்து கொண்டிருக்கிறான். அப்போது நீங்கள் ஒன்றும் சொல்லுவதில்லை.

அவன் ஏதாவது குதித்துக் கொண்டு அங்கேயும் இங்கேயும் ஓடினால் அப்போது மட்டும் திட்ட ஆரம்பிக்கிறீர்கள். இது சரியா? மெதுவாக நல்ல பிள்ளையாக நடந்து வந்து கொண்டிருந்தானே. அப்போதே அதைப் பாராட்டி ஒரு வார்த்தை சொன்னால் அது அவன் மனதுக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும். நல்ல சுபாவம் அவனுக்கு தானாக வந்து விடும். ஒழுங்காக தரையிலே உட்கார்ந்து சாதம் தரையிலே சிந்தாமல் சுத்தமாக சாப்பிடுகின்ற குழந்தையைப் பாராட்ட மாட்டீர்கள். ஆனால் சாதத்தை தரையிலே கண்டால் மட்டும் சத்தம் போட ஆரம்பிப்பீர்கள். அப்படி சத்தம் போடுவதை விட அமைதியாக இருப்பதே நல்லது. குழந்தைகளுடைய நல்ல சுபாவத்தை ஊக்கப்படுத்துவதற்கு அது சம்மந்தமான நிபுணர்கள் சில யோசனைகளைச் சொல்லியிருக்கின்றார்கள். குழந்தைகளிடம் நல்லவிதமான பழக்கத்தை வைத்துக்கொள்ளுங்கள். அவர்களின் அளவிற்கு இறங்கி பழகுங்கள். நீங்கள் பெரிய உத்தியோகத்தராக இருக்கலாம். அதுக்காக உங்கள் குழந்தைகளிடமும் அதிகார தோரணையுடன் பழக வேண்டாம். அலுவலகத்தை மறந்து விட்டு முடிந்தால் மண்டி போட்டு நடந்து உங்கள் குழந்தைக்கு வேடிக்கை காட்டுங்கள். கதை சொன்னால் குழந்தைகளுக்கு அதிகம் பிடிக்கும். நீங்கள் குழந்தையாக இருந்த போது நடந்த வேடிக்கையான சம்பவங்களை சொல்லுங்கள்.

அப்புறம் இன்னொரு விடயம் குழந்கைகளை ஏமாற்றக் கூடாது. அவர்களிடம் கொடுத்த வாக்குறுதியை காப்பற்ற வேண்டும். வாங்கி தாரேன் என்று சொன்னால் வாங்கி கொடுத்திட வேண்டும். டாக்டர் ஊசி போட வாரார். பையன் பயப்படுகின்றான். கொஞ்சம் கூட வலிக்காது என்று அவனிடம் பொய் சொல்லாதீர்கள். லேசாக வலிக்கும் அது ஒன்றும் பெரிய கஷ்டமாக இருக்காது. என்று உண்மையைச் சொல்ல வேண்டும். அப்போது தான் உங்கள் மேல் அவனுக்கு ஒரு நம்பிக்கை வரும். இல்லை என்றால் பின்னால் வேறு சந்தர்ப்பத்தில் நீங்கள் உண்மை சொன்னாலும் அவன் நம்பமாட்டான். கொஞ்சம் வளர்ந்த குழந்தையாக இருந்தால் அவனிடம் வாக்குவாதம் செய்துகொண்டிருப்பதை விட ஒரு ஒப்பந்தம் போடுவது நல்லது.

எல்லாப் பாடத்திலேயும் 50 வீதத்திற்கு மேல் புள்ளி வாங்கினால் உனக்கு ஒரு பரிசு தருவேன் என்று சொல்லி விடலாம். அதை விட்டு தினமும் அவனிடம் படி படி என்று சொல்லி அறுத்துக் கொண்டிருக்கக் கூடாது. இவ்வளவும் நிபுணர்கள் சொல்லியிருக்கின்ற நுணுக்கங்கள். ஒரு அம்மா பிள்ளையைக் கூப்பிட்டார். ஏம்மா என்று கேட்டுக் கொண்டு வந்து நின்றான். அவர் அவனிடம் ஒரு ஒப்பந்தம் போட்டார்கள். இதோ பார் நான் என்ன சொன்னாலும் எதிர்த்து பேசக் கூடாது! ஆமாம் ஆமாம் என்று சொல்ல வேண்டும். சரி சரி என்று சொல்லி தலையை ஆட்ட வேண்டும். இதைத் தவிர வேற வார்த்தை பேசக்கூடாது. ஒரு நாள் முழுவதும் அப்படி இருந்து விட்டாய் என்றால் எத்தனை தடவை நீ ஆமாம் சொன்னாயோ அத்தனை ரூபாய் உனக்கு பரிசு கொடுப்பேன். 20 ஆமாம் சொன்னால் 20 ரூபாய் பரிசு. என்ன சொல்லுகிறாய் என்றார்கள். அதுக்கு அந்த பையன் அட போங்க அம்மா. நீங்கள் எப்போது பந்தயம் போட்டாலும் அப்பா கிட்ட போடுகிற மாதிரியான பந்தயமாவே போடுறாய் என்றான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் வர்த்தக சந்தை விற்பனை கண்காட்சியும்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலும் கைத்தொழில் அமைச்சின் கீழ் கிளிநொச்சி மாவட்ட விதாதா வள நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உள்ளூர் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட வர்த்தக சந்தையும் விற்பனைக் கண்காட்சியும் நேற்று பகல் 9 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ். முரளிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தொழில் சந்தையினையும் கண்காட்சியினையும் ஆரம்பித்து வைத்தார் இதில் மாவட்ட பதில் அரச அதிபர் நளாயினி இன்பராஜ் மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் உள்ளூர் உற்பத்தியாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (நி-6-315-316)

# குடமுருட்டிக்குள புனரமைப்பு பணியை துரிதப்படுத்துங்கள்

## விவசாயிகள் வேண்டுகோள்



(அக்கராயன்)

கிளிநொச்சி குடமுருட்டிக் குளத்தினை முழுமையாகப் புனரமைப்பதற்கு கடந்த பத்தாண்டு காலமாகியும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என இக் குளத்தின் கீழான விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாக குடமுருட்டிக் குளம் விளங்குகின்றது. இக்குளத் தின் அணைக்கட்டில் பல இடங்களில் சேதங்கள் காணப்படும் நிலையில் மழை காலங்களில் மண் மூடைகள் அடுக்கி குளத்தினை பாதுகாக்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

குளத்தின் அணைக்கட்டினை முழுமையாக புனரமைப்பதன் மூலம் கூடுதலான நீரினை இக்குளத்தில் சேமிக்க முடியும். அக்கராயன் குளத்தில் இருந்து மழை காலத்தில் வெளியேறும் நீர் குடமுருட்டிக் குளத்தினை நிரப்புவதன் காரணமாக குடமுருட்டிக் குளத்தினை அபிவிருத்தி செய்வதன் மூலம் கூடுதலான நீரினை சேமித்து வைக்க முடியும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் இனியாவது கரிசனை கொண்டு குறித்த குளத்தினை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)



கிளிநொச்சி ஸ்ரீ கிருஷ்ணர் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்: தேவானந்தன்)

## மணல் ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 02.07.2024 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு எமது நீதிமன்ற வளாகத்தில் 78 கியூப் மணல், ஏல விற்பனை நடைபெறவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# இலங்கைக்கு கடத்த முயன்ற சுமார் 400 கிலோ கஞ்சா பறிமுதல்

## மூவர் கைது



(மன்னார்)

தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக சுமார் 40 கிலோ கஞ்சா பொட்டலங்களுடன் இராமேஸ்வரம் தங்கும் விடுதியில் பதுங்கி இருந்த இலங்கையைச் சேர்ந்த ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கஞ்சா மற்றும் இலங்கை ரூபாய் நோட்டுகளை பறிமுதல் செய்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்பிரிவு பொலிஸார் குறித்த மூவர் மீதும் வழக்குப் பதிவு செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-285)

# யானை வேலிகளை மீறி கிராமங்களுக்குள் வரும் யானைகள்

## அச்சத்தில் மக்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி கிராமங்களில் யானை வேலிகளையும் மீறி யானைகள் கிராமங்களுக்குள் வருவதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

மேற்படி கிராமங்களில் முக்கிய இடங்களில் யானை வேலிகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அடிக்கடி யானை வேலிகளை அகற்றி சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களினால் யானைகள் கிராமங்களுக்குள் வருகை தருவதாக தெரிவிக்கும் மக்கள் துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் இது தொடர்பாக தகவல்கள் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். (நி-6-350)

## உண்டியலில் இருந்த பணம் அபேஸ்

(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தைப் பகுதியில் அமைந்துள்ள ஆலய உண்டியல் பூட்டு உடைத்து சுமார் ரூபாய் 50 ஆயிரம் பணம் திருடப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (நி-6-60)

# வவுனியா-பண்டாரிகுள வீதி புனரமைப்பு



(குருமன்காடு)

வவுனியா-பண்டாரிகுளம் பிரதான வீதி புனரமைப்பு பணிகள் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தினமும் ஆயிரக்கணக்கானோர் பயன்படுத்தும் குறித்த வீதி செப்பனிடப்படாமை தொடர்பில் பொது மக்கள் விமர்சனம் செய்து வந்த நிலையிலேயே இப் பணிகள் வவுனியா அபிவிருத்து குழுத்தலைவரும், வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனின் நிதி ஒதுக்கீட்டில் 30.3 பில்லியன் ரூபாய் செலவில் குறித்த வீதி காபர்ட் வீதியாக 1.9 கிலோ மீற்றர் தூரத்திற்கு புனரமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-[illegible])

# பல்கலை கல்விசாரா ஊழியர்கள் வவுனியாவில் கவனயீர்ப்பு ஊர்வலம்

(குருமன்காடு)

வவுனியா பல்கலைக் கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் நேற்று கவனயீர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இலங்கை பூராகவும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் 57 ஆவது நாளாகவும் தமது பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருவதோடு சத்யாக்கிரக போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் கொழும்பில் பாடசாலை ஆசிரியர், அதிபர்களது போராட்டத் தளத்தில் அவர்கள் மீது தண்ணீர் தாரை பிரயோகம் மற்றும் கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதை கண்டித்தும், தமது நியாயமான கோரிக்கையாக காணப்படுகின்ற சம்பள உயர்வை உடனடியாக தர வேண்டும் எனக் கூறியும் இவ் ஊர்வலத்தினை ஏற்பாடு செய்திருந்தனர்.

வவுனியா பூங்கா வீதியில் உள்ள வவுனியா பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள் பீட கட்டடத் தொகுதியிலிருந்து ஆரம்பித்த ஊர்வலமானது நகர் வழியாக பழைய பேருந்து நிலையத்தைச் சென்றடைந்து நிறைவடைந்திருந்தது. (நி-6-250)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

519





அச்சமயம் அவர்கள் இருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்திலிருந்த காட்டிலிருந்த ஆந்தை ஒன்று கூவும் சப்தம் கேட்டது.

நந்தினி சப்தம் வந்த திக்கை நோக்கினாள். அதனால் அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை மற்ற இருவரும் கவனிக்கவில்லை.

"இந்தக் கோடிக்கரைக் காடு மிக விசித்திரமானது. இங்கே பட்டப்பகலிலேயே கோட்டான் கூவுகிறதே!" என்றான் பார்த்திபேந்திரன். இன்னும் இரண்டு தடவை அதே மாதிரி ஆந்தையின் குரல் கேட்டது.

நந்தினி திரும்பிப் பார்த்து, "உடனே புறப்பட வேண்டியது தானா? இன்னும் ஒரு நாள் இங்கே இருந்து பார்ப்பது நல்லதல்லவா? இளவரசர் ஏதாவது கட்டையைப் பிடித்துக் கொண்டு கரையில் வந்து ஒதுங்கக் கூடும் அல்லவா?" என்றாள்.

"பார்த்திபேந்திரா! இளையராணியின் மதிநுட்பத்தைப் பார்த்தாயா? நமக்கு இது தோன்றாமல் போயிற்றே? ஆம் இன்னும் ஒருநாள் இங்கே இருக்க வேண்டியதுதான் இருப்பது மட்டும் போதாது. கடற்கரை நெடுகிலும் ஆட்களை நிறுத்தி வைக்கவேண்டும் தேடிப் பார்க்கவும் சொல்ல வேண்டும்!" என்றார் பழுவேட்டரையர்.

"எனக்கு ஆட்சேபமில்லை, ஐயா! ஆனால் இளவரசர் இனி அகப்படுவார் என்ற நம்பிக்கை எனக்கில்லை. சுழற் காற்று அடித்தபோது கடலின் கொந்தளிப்பைப் பார்த்திருந்தால் தாங்களும் என்னைப் போலவே நிராசை கொள்வீர்கள்" என்றான் பார்த்திபேந்திரன்.

எனினும் கிழவர் கேட்கவில்லை. கடற்கரை நெடுகிலும் ஒரு காத தூரத்துக்குத் தம் ஆட்களைப் பரவலாக நிறுத்தி வைத்தார். அவரும் அமைதியின்றிக் கடற்கரை ஓரமாக அலைந்து திரிந்தார்.

### நான்காம் அத்தியாயம்
### தாழைப் புதர்

நடுக்கடலில் படகு தொட்டில் ஆடுவது போல் உல்லாசமாக ஆடிக்கொண்டு சென்றது. இரண்டு நாளைக்கு முன்னால் அங்கே தென்னைமர உயரம் அலைகள் எழும்பி விழுந்தன என்று கற்பனை செய்வதே கடினமான காரியம். படகில் இளவரசர் பொன்னியின் செல்வரும், வந்தியத்தேவனும், பூங்குழலியும் இருந்தனர். பூங்குழலியின் கையில் துடுப்பு இருந்தது. ஆனால் அதை அவள் விசையாகப் போடவில்லை. வந்தியத்தேவனுக்கும் இளவரசருக்கும் நடந்த சம்பாஷணையை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவர்களும் பேச்சில் கவனமாக இருந்தார்கள். படகு விரைவாகப் போக வேண்டுமென்று ஆவல் கொண்டவர்களாகத் தோன்றவில்லை.

படகு, கோடிக்கரை சேர்ந்த பிறகு என்ன செய்யவேண்டும் என்பது பற்றித்தான் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். இளவரசர் தஞ்சாவூருக்குப் போகக்கூடாது என்றும், பழையாறைக்கு வரவேண்டும் என்றும் வந்தியத்தேவன் வாதிட்டுக் கொண்டிருந்தான். அதற்குப் பல காரணங்களை அவன் எடுத்துச் சொன்னான்.

"தங்கள் சகோதரி தங்களை மிக அவசர காரியமாகப் பார்க்க விரும்புகிறார். தங்களைக் கையோடு அழைத்துக் கொண்டு வருவதாக வாக்களித்து வந்திருக்கிறேன். அதை நிறைவேற்றி வைக்க வேண்டும்" என்று மன்றாடினான்.

"உன் வாக்கை நிறைவேற்றுவதற்காக என் தந்தையின் கட்டளையை மீறச் சொல்கிறாயா?" என்று இளவரசர் கோபமாகக் கேட்டார். "அது தங்கள் தந்தையின் கட்டளையில்லை பழுவேட்டரையரின் கட்டளையல்லவா?" என்றான் வந்தியத்தேவன்.

அதோடு இன்னொன்றும் சொன்னான். "சக்கரவர்த்தியைத் தாங்கள் பார்க்கப் போவதாயிருந்தாலும் சுதந்திரமாகப் பார்க்கப் போவது நல்லதா, பழுவேட்டரையர்களின் சிறையாளியாகப் பார்க்கப் போவது நல்லதா? நான் சொல்கிறேன், கேளுங்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பொய்சாட்சி சொல்லக் கூடாது



ஒரு நாள், மன்னர் அக்பர் ஒரு ஐயத்தை எழுப்பினார். உலகத்தில் குருடர்கள் தொகை எவ்வளவு?" இந்த வினாவுக்குச் சபையிலிருந்தவர்களுள் பெரும் பகுதியினர், உலகத்தில் குருடர்களின் தொகை எவ்வளவு என்பதைத் துல்லியமாகக் கூறுவது கடினம். ஆனால், கண் பார்வை உள்ளவர்களை விட கண் பார்வையற்றவர்கள் தொகை மிக மிகக் குறைவாகத் தான் இருக்கும் என்னும் கருத்தைத் தெரிவித்தனர்.

அக்பர், "பீர்பால் ! உம் கருத்து என்ன?" எனக் கேட்டார்.

பீர்பால் எழுந்து, "மன்னர் பெருமானே! இப்போது இங்கு சொல்லப்பட்ட கருத்தே குருட்டுத்தனமானதாகும். உலகத்தில் கண்பார்வையற்ற குருடர்களின் தொகை தான் மிகமிக அதிகம். குறிப்பாகச் சொல்வதானால், இந்த உலகத்தில் பெரும் பகுதியினர் குருடர்கள் தான்" என்றார்.

"பீர்பால்! உமது கருத்து விநோதமாய் இருக்கிறதே ! உம் கருத்துப்படி இந்தச் சபையில் இருப்பவர்களுள் பெரும் பகுதியினர் குருடர்கள் தான் என்று கூறுவீர் போலிருக்கிறதே?" என்றார் அக்பர்.

"அதிலென்ன சந்தேகம்?" என்றார் பீர்பால் "அப்படியானால் நானும் ஒரு குருடானா?" என்றார் அக்பர். அதற்கு, "பொதுவாக ஒரு மனிதனை என்ன காரணத்தைக் கொண்டு குருடன் என்று கூறுகிறோம்?" என்று வினா எழுப்பினார் பீர்பால்.

"ஒரு பொருளை, அது இன்ன பொருள் தான் என்று சரியாக அடையாளம் கண்டு கொள்ள முடியாதவனைப் பொதுவாகக் குருடன் என்று கூறுகிறோம்" என அக்பர் மறுமொழி சொன்னார்.

"இப்போது ஒரு சோதனை செய்து பார்ப்போம் " என்று கூறி,

ஒரு துணியை எடுத்து, "மன்னர் அவர்களே! இது என்ன?" என்று கேட்டார்.

அது ஒரு துண்டுத் துணி!" எனறார் மன்னர் பீர்பால்.

அதே துணியைத் தமது தலையில் ஒழுங்காகச் சுற்றிக் கட்டிக் கொண்டு, "இது என்ன ?" என்று கேட்டார்

""அது ஒரு தலைப் பாகை!" என்றார் மன்னர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் வாக்குகளே ஜனாதிபதியைத் தீர்மானிக்கும்

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்கள் உத்தியோகப்பற்றற்ற முறையில் ஆரம்பமாகியுள்ளன.

தேர்தலில் போட்டியிடவுள்ளவர்கள் யார் என்பது ஓரளவுக்கு உறுதியாகிவிட்டது.

இருந்தும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மொட்டுக் கட்சியின் ஆதரவு கிடைக்க வாய்ப்பில்லை என்பது மெல்லத் தெரிகிறது.

ஆம், மொட்டுக்கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தயாரில்லை என்ற காரணத்தால், தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கு மொட்டுக்கட்சி தயாராகி வருகிறது.

இலங்கையின் முதற்தர செல்வந்தரான தம்மிக்க பெரேரா ஏலவே ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு அதீத பிரயத்தனம் மேற்கொண்டார்.

தான் ஜனாதிபதியாக வந்தால், இலங்கையின் பொருளாதாரப் பஞ்சத்தை தனது செல்வத்தின் மூலம் இட்டுக்கட்டுவேன் எனவும் அவர் கூறியிருந்தார்.

இப்போது தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தி, அவரை வெற்றிபெற வைத்தால், நாடு பட்ட கடன்களில் கணிசமான தொகையை அவர் மூலம் ஈடுசெய்ய முடியும்.

தவிர, பாதாளத்தில் வீழ்ந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்திவிட்டால், அது ராஜபக்ஷ குடும்பத்துக்குச் சாதகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தும் என மொட்டுக்கட்சி கருதுகிறது.

இந்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தம்மிக்க பெரேரா போட்டியிடுவதற்கான சாத்தியம் இருக்கவே செய்யும்.

இங்குதான் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸாநாயக்க, தம்மிக்க பெரேரா ஆகியோர் தேர்தல் களத்தில் குதிப்பது உறுதியாகிறது.

இங்கு மொட்டுக்கட்சியின் சார்பில் தம்மிக்க பெரேரா களமிறங்குவாராயின், அஃது சஜித் பிரேமதாஸவுக்கோ அன்றி அநுர குமார திஸாநாயக்கவுக்கோ பாதிப்பை ஏற்படுத்த மாட்டாது.

மாறாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே அது பாதகமாக அமையும்.

அதாவது, மொட்டுக்கட்சியின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்குமாயின், ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளும் மொட்டுக்கட்சியின் வாக்குகளும் சேர்ந்து ரணில் விக்கிரமசிங்கவை பலப்படுத்தும்.

ஆனால் மொட்டுக் கட்சி தன் சார்பில் தம்மிக்க பெரேராவை களமிறக்குமாயின் அது ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பாதகமாக அமைவதுடன் தனித்து சிங்கள மக்களின் வாக்குகளால் மட்டும் ஜனாதிபதியை வெல்ல வைப்பது முடியாத காரியமாகிவிடும்.

இங்குதான் அடுத்த ஜனாதிபதி யார் என்பதை தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானிக்கின்ற சூழ்நிலை உருவாகும்.

ஆகையால் இதுவிடயத்தில் தமிழ்த் தரப்புகள் நிதானமாகச் சிந்தித்து தீர்மானம் எடுக்க வேண்டிய சூழமைவு ஏற்பட்டுள்ளது.

# பாதியில் நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படும்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

பாதியில் நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும்,நாட்டின் கடனை மறுசீரமைக்க கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் மூலம் நாட்டின் பொருளாதார நெருக்கடி முடிவுக்கு வந்துள்ளமை உறுதியாகியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்ட முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் நேற்று உடுகம்பலையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட போது இதனைக் தெரிவித்தார்.

இதேவேளை வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்க கடன் வழங்குபவர்கள் சம்மதிக்க வைத்தது நாட்டின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றாகும் என்றும் தேவைக்கு ஏற்ப மீண்டும் சர்வதேச கடன்களை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

மேலும் பாதியில் நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை மீள ஆரம்பிப்பதுடன் புதிய அபிவிருத்தி திட்டங்களையும் ஆரம்பிக்க வாய்ப்பு ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## யாழ். போதனாவுக்கு முன் சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தப்பட்ட கார் பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 13ஆம் இலக்க நுழைவாயில் முன்பாக சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரினை யாழ்ப்பாண பொலிஸார் மீட்டுச் சென்றுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை மருந்து களஞ்சியத்திற்கு செல்லும் நுழைவாயிலான 13ஆம் இலக்க நுழைவாயிலை முற்றாக மறித்தவாறான நிலையில் நபர் ஒருவர் காரினை நிறுத்தி சென்றுள்ளார்.

அதனால் மருந்து களஞ்சியத்தில் இருந்து வைத்தியசாலை வாகனம் வெளியே செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டமையால், வைத்தியசாலை ஊழியர்கள், காரின் சாரதியை தேடி உள்ளனர்.

நீண்ட நேரமாகியும் காரின் சாரதி அவ்விடத்திற்கு வராதமையால், வைத்தியசாலை பணிப்பாளர் ஊடாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து, விசாரணைகளை மேற்கொண்டதுடன், அயலில் உள்ள கடைகளில் விசாரித்த போதிலும் காரின் சாரதியை கண்டறிய முடியாததால், காரினை அவ்விடத்தில் இருந்து கனரக வாகனத்தின் உதவியுடன் மீட்டு, பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

காரின் இலக்க தகட்டின் ஊடாக அதன் உரிமையாளரை கண்டறிவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,10,33)

மட்டக்களப்பில்

## பெண் வேசம் போட்டு —— தாய், மகள் மீது கத்திக் குத்து

மட்டக்களப்பு தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்சநகர் பகுதியில் பெண் வேடம் போட்டு தாய் மற்றும் மகளை கத்தியால் தாக்கி விட்டு தப்பிக்க முயன்றவரை கைது செய்துள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் 38 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை குறித்த தாக்குதலுக்கு உள்ளான 54 வயதுடைய தாயும், 31 வயதுடைய மகளும் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் தாய் மட்டக்களப்பு பொது வைத்தியசாலையிலும் மகள் கந்தளாய் தள வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றுவருவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சந்தேகநபர் ஈச்ச நகர் பகுதியில் தொலைபேசி திருத்தகம் ஒன்றை நடாத்திவந்துள்ளார். அதே பகுதியை சேர்ந்த குடும்பப்பெண் குறித்த நபருக்கு கடனாக பணம் வழங்கியுள்ளார்.

இந்த நிலையில் கொடுத்த பணத்தை மீளப்பெறுவதற்காக நேற்று முன்தினம் குறித்த குடும்பப் பெண், சந்தேகநபரின் கடைக்குச் சென்று பணத்தை கோரியுள்ளார்.

அவர் பணம் கொடுக்க மறுத்ததால் அங்கு வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது. அதனைத்தொடர்ந்து அந்த பெண் அவ்விடத்திலிருந்து சென்றுள்ளார்.

பின்னர், நேற்று மாலை குறித்த சந்தேக நபர் அந்த பெண்ணின் வீட்டுக்குச் சென்று பெண்ணுக்கும் அவரின் மகளுக்கு கத்தியால் தாறுமாறாக குத்தியுள்ளார். பின்னர் இரத்தக் கறைகளை தண்ணீரால் கழுவிவிட்டு, அந்த வீட்டில் இருந்த ஹபாயாவை அணிந்து பெண் வேடத்தில் வெளியே வந்துள்ளார்.

முகத்தை மூடி ஹபாயா அணிந்து வெளியே நடமாடியவர் மேல் சந்தேகமடைந்த பொதுமக்கள் அவரை பிடித்து விசாரித்ததுடன், பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-7,10)

## மன்னார் மடு அன்னையின் திருவிழா தொடர்பாக விசேட கலந்துரையாடல்

(மடு)

மடு அன்னையின் ஆடி மாத திருவிழா தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று மடுத்திருத்தல கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

இதில் சுகாதாரம், போக்குவரத்து,குடிநீர்,மின்சாரம்,பாதுகாப்பு தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா ஆரம்பமானது.தொடர்ந்து நவநாள் திருப்பலிதமிழ்சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்க உள்ளனர்.

இதில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக் கணக்கான மக்கள் மடு அன்னையின் ஆசிபெற வருகை தர உள்ளமையினால் சகல வித்தான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார்,மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார் ,பிரதேச செயலாளர்கள்,திணைக்கள தலைவர்கள்,பொலிஸ், கடற்படை மற்றும் ராணுவ உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## யாழ்ப்பாணத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கான ஒன்றுகூடல்

வேலையற்ற பட்டதாரிகளுக்கான கட்டாய ஒன்றுகூடல் யாழ்ப்பாணம் கண்டி வீதியில் உள்ள திருமறைக் கலா மன்ற மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (30) காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வட மாகாணத்தில்காணப்படுகின்ற அனைத்து வெற்றிடங்களையும்நிரப்பும்நோக்கில், வடமாகாண ஆளுநரிடம் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

அதற்கு அமைவாக இச் செயல்திட்டத்தை விரைவாக முன்னெடுக்கும்நோக்கிலும், ஜனாதிபதியை நேரடியாக சந்திப்பதற்கான வாய்ப்பை ஆளுநர் பெற்றுத்தர உறுதி கூறியமையாலும் நமது ஏற்பாடுகளை விரைவாக முன்னெடுக்க வேண்டிய கடமை எங்களிடம் உள்ளது.

அதனால் முக்கிய தீர்மானங்களை திட்டமிடுவதற்காக வடமாகாண வேலையில்லா பட்டதாரிகளை, தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை

**கலாநிதி க.தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

04

இதுவே இந்த பஞ்சத்துக்கு காரணம் என்கிறார் அமர்த்தியா சென். மேலும் கல்கத்தா போன்ற நகரங்களில் மட்டும் நியாய விலை கடைகளில் உணவுப் பொருட்களை பிரித்தானிய இந்திய அரசு விநியோகித்து நகர்ப்புற மக்களின் விமர்சனங்களில் இருந்து தப்பிக்க நினைத்தது. மேலும் கிராமப்புறங்களில் கவனத்தில் கொள்ளாமல் இருந்தது.

இதனால் கல்கத்தாவுக்குப் போனால் உணவு கிடைக்கும் என கிராமங்களில் இருந்து இலட்சக் கணக்கான மக்கள் கல்கத்தாவில் குவிந்தனர் என்கிறார் அவர். 1943 இல் கொல்கத்தாவில் மக்கள் உணவின்றி மடியத் தொடங்கினர்.

பட்டினிச் சாவுகளைத் தடுக்க அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என ஒரு சாரரும், வழக்கமாக பஞ்சங்களை எதிர் கொள்ள அரசு எடுக்கும் முடிவுகள் இப்பஞ்சத்தை சமாளிக்கப் போதுமானதாக இல்லை என ஒரு சாரரும் கருதுகின்றனர். 1944 இல் பஞ்சம் தீர்ந்த போது 20 முதல் 40 லட்சம் மக்கள் மாண்டிருந்தனர்.

## 20ஆம் நூற்றாண்டில் வங்கம்

1905இற்கும் 1911இற்கும் இடையில், டாக்காவைத் தலைநகராகக் கொண்டு கிழக்குப் பகுதியொன்றை உருவாக்கும் நிறைவேற்றப்படாத வங்காள மாகாணத்தை இரண்டு பகுதிகளாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1947இல் பிரித்தானியப் பேரரசின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து, சமய அடிப்படையில் வங்காளம் பிரிக்கப்பட்டது.

மேற்குப்பகுதி இந்தியாவுடன் இணைய கிழக்குப்பகுதி (முஸ்லிம் பெரும்பான்மை) டாக்காவைத் தலைநகராகக் கொண்டு கிழக்கு வங்காளம் (பின்னர் கிழக்குப் பாகிஸ்தான்) எனும் பெயரில், பாகிஸ்தானுடன் இணைந்தது. 1950இல், கிழக்கு வங்காளத்தில் நிலச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு மானியமுறை ஜமீன்தார் முறை ஒழிக்கப்பட்டது. பொருளாதார மற்றும் மக்கட் தொகை விகிதாசாரத்தில் கிழக்குப் பகுதி செல்வாக்குச் செலுத்தினா லும், பாகிஸ்தானின் அரசாங்க மும், இராணுவமும், மேற்குப்ப குதியின் உயர் வகுப்பினரின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது.

## வங்காள மொழி இயக்கம்

வங்காள மொழி இயக்கம், அல்லது மொழி இயக்கம் என்பது, வங்காள நாட்டில் (அன்றைய கிழக்குப் பாகிஸ்தானில்) நிகழ்ந்த ஒரு அரசியல் முயற்சி. இம்முயற்சி, வங்காள மொழியை பாகிஸ்தானின் அலுவல் மொழிகளுள் ஒன்றாக ஏற்கக் கோரியது.

1948இல் பாகிஸ்தான் அரசு உருது மொழியை பாக்கிஸ்தானின் ஒரே நாட்டு மொழியாக அறிவித்தது. இந்த அறிவிப்பு வங்காள மொழி பேசும் கிழக்குப் பாக்கிஸ்தானைக் கொந்தளிக்கச் செய்தது.

டாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பிற அரசியல் ஆர்வலர்கள் சட்டத்தை மீறி 21 பெப்ரவரி 1952 அன்று ஒரு போராட்டத்தை ஏற்பாடு செய்தனர். அன்று காவல்துறை மாணவர் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கொன்றபோது இயக்கம் உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்த மரணங்கள் பரவலான உள்நாட்டுக் கலவரத்தைத் தூண்டின. பல வருட மோதல்களுக்குப் பிறகு, மத்திய அரசு 1956 இல் வங்காள மொழிக்கு அதிகாரப்பூர்வ அந்தஸ்தை வழங்கியது.

மொழி இயக்கம் கிழக்கு வங்காளத்திலும் பின்னர் கிழக்கு பாகிஸ்தானிலும் வங்காள தேசிய அடையாளத்தை வலியுறுத்தியது. மேலும் 6-புள்ளி இயக்கம் மற்றும் அதன் பின் வங்காளதேச விடுதலைப் போர் மற்றும் வங்காள மொழி அமுலாக்கச் சட்டம், 1987 உட்பட வங்காள தேசியவாத இயக்கங்களுக்கு முன்னோடியாக மாறியது.

பங்களாதேஷில் பெப்ரவரி 21 தேசிய விடுமுறை நாளாக்கப்பட்டு மொழி இயக்க தினமாக அனுசரிக்கப்படுகிறது. இயக்கம் மற்றும் அதில் பாதிக்கப்பட்டவர்களின் நினைவாக டாக்கா மருத்துவக் கல்லூரிக்கு அருகில் ஷஹீத் மினார் நினைவுச்சின்னம் கட்டப்பட்டுள்ளது.

## பன்னாட்டுத் தாய்மொழி நாள்

பன்னாட்டுத் தாய்மொழி நாள் பெப்ரவரி 21 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இது மொழி, பண்பாட்டு பன்மையையும் உலகின் பல மொழிகளையும் மேம்படுத்தலுக்கான விழிப்புணர்வை வென்றெடுக்க கொண்டாடப்படுகிறது.

இந்தக் கொண்டாட்டம் முதலில் யுனெஸ்கோவால் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 இல் அறிவிக்கப்பட்டது. இத் தீர்மானம் 2008 ஆம் ஆண்டை பன்னாட்டு மொழிகளுக்கான ஆண்டாகவும் அறிவித்தது.

1952 இல் இந்த நாளன்று, அன்றைய கிழக்கு பாக்கிஸ்தான் தலைநகர் டாக்காவில் வங்காள மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்கக் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் போது உயிர்நீத்த நான்கு மாணவர்களின் நினைவாக இந்நாள் உலகளாவிய முறையில் மொழி தொடர்பாக நினைவு கூறப்படும் சிறப்பு நாளாகக் கொண்டாடப்படுகிறது.

வங்காள தேச அரசாங்கத்தின் முயற்சிகள், அனைத்துலக அமைப்புகளது ஆதரவுகள் காரணமாக ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (யுனெஸ்கோ) அமைப்பின் 1999, பெப்ரவரி 21 அன்று பொதுமன்ற மாநாட்டின் 30 ஆவது அமர்வில் இந்நாளை அனைத்துலக தாய் மொழி நாளாக அறிவித்தது. பல்வேறு சமூகங்களின் மொழி, பண்பாட்டுத் தனித்தன்மைகளைப் பேணுவதுடன் அவற்றுக்கிடையிலான ஒற்றுமையையும் உருவாக்கும் எண்ணத்தோடு இந்நாளை யுனெஸ்கோ அறிவித்தது.

1952இன் வங்காள மொழி இயக்கமே பாகிஸ்தானின் கிழக்கு மற்றும் மேற்குக்கிடையிலான முதல் விரிசலாக அமைந்தது. அடுத்த பத்தாண்டுகளில், பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் மத்திய அரசாங்கத்துடனான பிரச்சினைகள் அதிகரிக்கத் தொடங்கின. இக்காலப்பகுதியில், வங்காளி பேசும் மக்களின் அரசியல் குரலாக அவாமி லீக் எழுச்சி பெற்றது. 1960களில், இது சுயாட்சிக்காக கிளர்ச்சியில் ஈடுபட்டது.

1966இல் அதன் தலைவர், சேக் முஜிபுர் ரகுமான் (முஜிப்) சிறையிலிடப்பட்டார். 1969இல், வரலாறு காணாத பிரபல்யமான கிளர்ச்சியின் பின்னர் இவர் விடுவிக்கப்பட்டார். 1970இல், ஒரு பாரிய சூறாவளி கிழக்குப் பாகிஸ்தானின் கடற்கரைப் பகுதியை அழித்ததோடு, ஐந்து லட்சம் பேரையும் கொன்றது.

எனினும், மத்திய அரசாங்கம் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. 1970 தேர்தலில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற சேக் முஜிபுர் ரகுமானின் அவாமி லீக் கட்சி ஆட்சியமைப்பதற்கு தடைவிதிக்கப்பட்டமையால் வங்காள மக்களின் கோபம் அதிகரித்தது.

முஜிபுடனான சமாதானப் பேச்சு வார்த்தைகள் தடைப்பட்டதைத் தொடர்ந்து, ஜனாதிபதி யாஹ்யா கான் மற்றும் இராணுவத் தலைவர்கள் ஒப்பரேசன் சேர்ச்லைட் எனப்பட்ட இராணுவ நடவடிக்கையை கிழக்குப் பாகிஸ்தான் மீது நடத்தினர். இதன் மூலம், மார்ச் 26, 1971இல், அதிகாலை நேரத்தில், முஜிபுர் ரகுமானைக் கைது செய்தனர். யாஹ்யா கானின் இந் நடவடிக்கை மிகவும் கொடூரமானதாக இருந்ததோடு, போரின்போது இடம் பெற்ற வன்முறைகளால் பலர் இறந்தனர்.

இதில் முக்கிய இலக்குகளாக இருந்தோர் அறிஞர்களும் இந்துக்களுமாவர். மேலும், கிட்டத்தட்ட ஒரு மில்லியன் அகதிகள் அருகிலுள்ள இந்தியாவுக்கு விரட்டப்பட்டனர்.

போரின்போது படுகொலை செய்யப்பட்டோர் தொகை முப்பதினாயிரத்திலிருந்து, மூன்று மில்லியன் வரை என மதிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் நேரடித் தலையீடு காரணமாக ஜனவரி 8, 1972இல் முஜிபுர் ரகுமான் விடுதலை செய்யப்பட்டார்.

அவாமி லீக்கின் தலைவர்கள் இந்தியாவின் கல்கத்தாவில் நாடு கடந்த அரசாங்கமொன்றை அமைத்துக் கொண்டனர். ஏப்ரல் 17, 1971 இல், அது கிழக்கு பாகிஸ்தானின் குஸ்தியா மாவட்டத்திலுள்ள மெஹெர் பூரில் முறையாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டது. இதன் படி, தாஜுதீன் அஹமட் முதல் பிரதமராகவும், சையத் நஸ்ருல் இஸ்லாம் அதன் தற்காலிக ஜனா திபதியாகவும் பதவியேற்றனர்.

வங்காளதேச விடுதலைப் போர் ஒன்பது மாதங்கள் நீடித்தது. வங்காளப் படைவீரர்களைக் கொண்ட தளபதி M.A.G. ஒஸ்மானியால் வழிநடத்தப்பட்ட, வங்காள தேசப் படைகள், 11 பகுதிகளாகப் பிரிந்து பாகிஸ்தானியப் படைகளுக்கெதிராக பாரிய கெரில்லாப் போரை தொடுத்தன.

இதற்கு உதவியாக, இந்திய இராணுவத்தால் உதவி வழங்கப்பட்ட, மேஜர் ஜெனரல். சுஜித் சிங் உபன் தலைமையிலான, கதெரியா வாகினி, ஹெமாயத் வாகினி ஆகியவற்றைக் கொண்ட முக்தி வாகினி எனும் அமைப்பும் போரில் ஈடுபட்டது.

இந்திய இராணுவம் டாகா பகுதியைச் சுற்றி வளைத்ததுடன் போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தது. மார்ச் 19, 1972 வரை இந்திய இராணுவம் வங்காள தேசத்தில் தங்கியிருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோயாளர்...

பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வைத்தியசாலையில் நீண்ட நாட்களாக நுழைவாயில் காப்பாளராக கடமையாற்றிய இளைஞன் ஒருவர் மன அழுத்தம் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

குறித்த இளைஞன் வைத்தியசாலையின் 12ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலை நோயாளர் விடுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நொச்சிமோட்டைப் பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய ஜீவராஜா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த மரணம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,10,250)


மஹஜன சம்பத
திகதி 2024.06.27
சீட்டிழுப்பு இலக்கம் 5517
K 1 0 3 6 5 2
அத சம்பத K 3 6 5 2
சீட்டிழுப்பு இலக்கம் 92
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.06.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1547
F 15 43 67 68 F
Double Chance 01975

மெகா பவர்
திகதி 27/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1865
D 18 03 62 71 79
65778

லக்கி 7 VIP
திகதி 2024.06.27
சீட்டிழுப்பு இலக்கம் 0343
H 1 1 0 4 6 1 H
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3759
சீட்டிழுப்பு திகதி 27.06.2024
Q 29 38 58 61
Q 92912
தேசிய லொத்தர் சபை

ராசிபலன் NLB
திகதி 2024.06.27
சீட்டிழுப்பு இலக்கம் 0826
தனுசு 14 36 39 42
081502 23243 55619 16
தேசிய லொத்தர் சபை


## மயங்கி...

மயங்கி விழுந்தவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் விளான் பகுதியைச் சேர்ந்த மனுவல் அன்ரன் மரியதாஸ் (வயது-61) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்று சுண்ணாம்பு சூளைக்கு வேலைக்காகச் சென்றுள்ளார். அவர் வேலை செய்துகொண்டிருந்தபோது திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

இந்நிலையில் அவரை தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,10)

## நோயாளியான...

சாலைச் செயற்பாடுகள் வழமையாக இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது நஞ்சு அருந்தியதாக தெரிவித்து கரவெட்டி பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அங்கு சென்ற நபர் ஒருவர் நோயாளியை பார்வையிடுவது போன்று பாசாங்கு செய்து விட்டு திடீரென தன்னிடம் இருந்த கத்தி எடுத்து யுவதியை வெட்ட முற்பட்ட சமயம் தாதியர்கள் சத்தமிட்டதனால் அவர் வெட்டும் முயற்சியை கைவிட்டு தப்பியோடியுள்ளார். (ம-7,10,60)

## இன்று பாடசாலை...

ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்ட நிலையிலும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 10 ஆயிரம் கொடுப்பனவு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.

அத்தோடு ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு குறித்து ஆராய ஜனாதிபதி புதிய குழுவொன்றையும் நியமித்துள்ளார் என அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (ம-7,10)

## நாய்க்கடிக்கு...

யைச் சேர்ந்த தியாகரன் சாருஷா (வயது-4) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

மே மாதம் 10 ஆம் திகதி அயல்வீட்டுக்குச் சென்றபோது நாய்க்கடிக்கு உள்ளான குறித்த சிறுமி, கடந்த செவ்வாய்க்கிழமை திடீரென சுகவீன முற்ற நிலையில் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

எனினும் சிகிச்சை பலனின்றி சிறுமி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் நேற்று வியாழக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

இதன்போது சிறுமியின் பெற்றோர் வாக்குமூலம் அளிக்கையில் தாம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும் தருமபுரம் வைத்தியசாலையில் இருந்த வைத்தியர் 3 வயது தடுப்பூசி போட்டதன் காரணமாக நாய்க்கடிக்கான தடுப்பூசி ஏற்றவேண்டாம் என்றதால் தாம் தடுப்பூசி ஏற்றவில்லை என தெரிவித்தனர். (ம-7,10,60,316)

## மின் ஒழுக்கால்...

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, வீட்டின் உரிமையாளர் வீட்டைப்பூட்டி விட்டு வேலைக்கு சென்று வந்து திரும்பி பார்த்த வேளை வீட்டின் மேற்தளம் முற்றாக எரிந்துள்ளது.

குறித்த வீடு எரிந்து கொண்டிருப்பதை அவதானித்த அயலவர்கள் மின்சாரத்தை நிறுத்திவிட்டு தண்ணீரைக் கொண்டு தீப்பரவலை கட்டுப்படுத்தியுள்ளனர்.

தீப்பரவலில் வீட்டின் மேல தளத்தில் இருந்த கட்டில், இரண்டு தொலைக் காட்சி பெட்டிகள், அலுமாரி வீட்டின் ஏனைய உபகர ணங்களும் எரிந்து நாசமாகியுள் ளது. (ம-7,10)

## வலுவடைந்த...

கிணைப்புக் குழு கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரான குலசிங்கம் திலீபன் ஆகியோரின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய ஆளுநர், ஜனாதிபதியின் வழிகாட்டுதலுக்கு அமைய வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

தொழில் அற்றோர் பிரச்சினைக்கு முன்னெடுக்கப்படவுள்ள தீர்வு திட்டங்கள் தொடர்பிலும், வாழ்வாதார உதவித் திட்டங்கள் தொடர்பிலும் குறிப்பிட்டார்.

ஏனைய மாகாணங்களைப்போல வடக்கையும் பொருளாதாரத்தில் மேம்பட்ட மாகாணமாக மாற்றுவதே ஜனாதிபதியின் ஆசை எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்திற்கு தேவையான அடிப்படை கட்டுமானங்களையும், வசதிகளையும் ஜனாதிபதி பெற்றுக்கொடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

பொருளாதார வலயங்களை ஸ்தாபிப்பதோடு, பலாலி விமான நிலைய சேவைகளையும், காங்கேசன்துறை துறைமுகத்தையும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் கூறினார்.

இவ்வாறான திட்டங்கள் ஊடாக மாகாணத்தின் பொருளாதாரத்தை பலப்படுத்தி, மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டார். (ம-7,10)

## கல்வி நடவடிக்...

சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் மதிப்பீட்டாளர்கள் மற்றும் மதிப்பீட்டு நிலைய ஊழியர்களுக்கு இது தொடர்பில் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஆரம்பிக்கப்படவிருந்த மதிப்பீட்டு பணிகள் ஆசிரியர்களின் போராட்டம் காரணமாக இன்று வரை பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)


உத்தியோகபூர்வ முடிவுகள்
27.06.2024 வெற்றி வாரம் 225 வர்ணம் மஞ்சள்
சுப்பர் பொல் சம்பத்
U 5 1 6 4 7 1
34505
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,479,760.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2491 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 27.06.2024 தினம் வியாழன்
04 44 48 50 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 95,648,595.20
DLB

திகதி 2024.06.27 வெற்றி வாரம் 4652 வர்ணம் சிவப்பு
சனிதா
01 46 49 56 H
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,949,708.00
18810
DLB

சீட்டிழுப்பு வாரம் 4203 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.06.27 தினம் வியாழக்கிழமை
கன்னி
09 29 42 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,672,496.40
232190
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 35 01 13 28 47
1667
27.06.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 529,957,313.00
DLB

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2317
சீட்டிழுப்பு திகதி : 2024.06.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 123,353,487.20
அட கோட்டிபதி ADA KOTIPATHI
11 13 14 61 U
168747
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டை உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்

## அமைச்சர் மகிந்த அமரவீர

நாட்டில் முட்டை உற்பத்தியை அதிகரிக்க புதிய திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

குறித்த தகவலை விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதன்படி அடுத்த இரண்டு மாதங்களில் 160 இளைஞர் விவசாயத் தொழில்முனைவோர் கிராமங்களில் உள்ள தொழில் முனைவோருக்கு 160000 கோழிக்குஞ்சுகள் வழங்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, சந்தையில் தேங்காய் எண்ணெய்யின் விலை அதிகரிப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இறக்குமதி செய்யப்படும் 01 லீற்றர் தேங்காய் எண்ணெய்க்கு 150 ரூபாவை அரசாங்கம் அறவிடுகின்றது.

எதிர்காலத்தில் இந்த தொகையை குறைக்கும் பரிந்துரையை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க உள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ம-7,10)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் அம்பாறையில் போராட்டம்



அம்பாறையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டமானது, நேற்று தம்பிலுவில் மத்திய சந்தையில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி தம்பிராசா செல்வராணியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டங்களானது, கடைசி மூன்று நாட்களும்நாட்டில் உள்ள எட்டு மாவட்டங்களில்இடம்பெற்றுள்ளதுடன் நேற்று அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

போராட்டத்தில் என் பிள்ளைகள் எங்கே மற்றும் குழந்தைகளை தேடி நீதி கேட்ட எங்கள் உயிர்கள் மாய்கின்றது Omp TRC வேண்டாம் உயிருடன் பிடித்து செல்லப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச நீதி வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரி நின்றனர். (ம-7,10)

# பெண்ணிடம் இலஞ்சம் பெற்ற கிராம சேவகர் கைது

ஹீரஸ்ஸகல கிராம சேவகர் அதிகாரி ஒருவர் பெண் ஒருவரிடம் 25,000 ரூபாவை லஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த அதிகாரியை நேற்று முன்தினம்இலஞ்ச ஊழல்விசாரணை ஆணை குழுவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருகையில், ஹீரஸ்ஸகல கிராம சேவை பிரிவில் வசிக்கும் பெண் ஒருவர் குறித்த பிரதேசத்தில் கடமையாற்றும் கிராமசேவை அதிகாரி தன்னிடம் 25,000 ரூபா இலஞ்சமாக கேட்பதாகமுறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இதனையடுத்து இலஞ்ச ஊழல்விசாரணைஆணைக் குழுவின் அதிகாரிகள் குழு ஹிரஸ்ஸகல பிரதேசத்திற்குச் சென்று கிராம உத்தியோகத்தர் அலுவலக வளாகத்தில் பணம் கொடுத்த போது அவரை கைது செய்துள்ளனர்.

முறைப்பாடு செய்த பெண்ணின் மகனின் வீட்டிற்கு மின்சாரம் வழங்கிய சம்பவம் தொடர்பிலேயே கிராம சேவகர் குறித்த பணத்தை கோரியுள்ள தாகத் தெரியவந்துள்ளது. (ம-7,10)


Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-0689)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
(C-0689)
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
(111)
074 17 37 684

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas- All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0689)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

கடந்த 2024.05.31ம் திகதி வெள்ளிக்கிழமை
அன்று இறைபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

## அமரர் கந்தசாமி இராசலட்சுமி



அவர்களின் 31ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (2024.06.27) வியாழக்கிழமை அதிகாலை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் 2024.06.30 ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தாங்களும் வருகை தந்து எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

4ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(C-687)

– குடும்பத்தினர் –
077 080 6481

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.